ஸ்ரீ:

ஸ்ரீமதே ஶட2கோபாய நம:
ஸ்ரீவிஷ்ணுசித்தகு3ரவே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:
ஸ்ரீமத்3வரவரமுநயே நம:

# ஸ்ரீஶைலேஶத3யாபாத்ரம்

பராங்குஶ திருஅவதார ௵5108 ஸர்வத4ாரி ௵ ஆனி மீ–ஜூலை 3–7–08




ஸ்ரீஶைலேஶத3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3 கு3ணார்ணவம்।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம்।।

जीवोज्जीवनसङ्कल्पं हरे: पूर्णं विधित्सुकाम्।
श्रियं सत्याशिषं कुर्वत्सदाचार्यपरम्परा ।।
यावत् , विजयतां तावत्सीमातिक्रान्तवैभवा ।
श्रीशैलेशदयापात्रनाम्नीयं पत्रिका शुभा ।।


ஆசிரியர்: R.ரகு4ராமன்
24/71,புத்தூர் அக்3ரஹாரம் திருச்சி–620 017.

## விஷயஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| மங்க₃ளாஶாஸநம், தலையங்கம் | | 1–02 |
| நம்பெருமாளும் நம்மணவாளமாமுனிகளும் | | 3–07 |
| ஸ்ரீஶைலேஶத₃யாபாத்ரத்தனியன் வைப₄வம் | | 8–20 |
| ஸ்ரீரங்கராஜஸ்தவவ்யாக்₂யாநம் | | 21–24 |
| பெரியாழ்வார் திருமொழி வ்யாக்₂யாநங்கள் | – | 25–32 |
| கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்₂யாநங்கள் | – | 33–40 |
| வரவரமுநிஸுசரிதசஷகம் | – | 40–44 |


## போஷகர்கள்

1. திருவெள்ளறை மேலத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ.உ.வே.ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி
2. திருவெள்ளறை மேலத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ உ.வே.திருவேங்கடம்ஸ்வாமி
3. கோயிலாத்தான் ஸ்ரீ.உ.வே.விஜயராக₄வன்ஸ்வாமி
4. ஸ்ரீ.உ.வே.ஆய்நரஸிம்மன்ஸ்வாமி
5. ஸ்ரீ.உ.வே.V.V.நாராயணன்ஸ்வாமி
6. ஸ்ரீ. உ.வே.ஆராவமுதன்ஸ்வாமி
7. ஸ்ரீ உ.வே.ப₄ரதரகு₄பதி ஸ்வாமி
8. ஸ்ரீ உ.வே.ஜகந்நாதன் ஸ்வாமி
9. சென்னைஅட்வகேட் ஸ்ரீ உ.வே.கோவிந்தராஜன் ஸ்வாமி

## ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம்

நமது பூர்வர்கள் ஸ்ரீவைஷ்ணவலக்ஷணங்களாகப் பலவற்றைக் கூறியுள்ளார்கள். அவைகளுள் ப்ரதாநமாகக் கருதப்படுவது மறந்தும் புறந்தொழாமையேயாகும். மறந்தும்புறந்தொழாமையென்றால் ஸ்ரீமந்நாராயணனைத்தவிர வேறு தெய்வங்களை வணங்காதிருக்கையேயாகும். இவ்வர்த்தத்தை ப்ரணவத்திலுள்ள உகாரத்தால் நாம் அறிகின்றோம். திருமழிசையாழ்வார் ‘மறந்தும் புறந்தொழாமாந்தர்’ (நான்.திரு.68) என்கிற பாட்டிலே, ஒருகால் கற்ற எம்பெருமான் திருநாமத்தை அடியோடு மறந்துவிட்டாலும், மற்றொரு தெய்வத்திடம் செல்லாமலிப்பதே ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் என்று காட்டியுள்ளார். இதனையே பிள்ளைலோகாசார்யர் ‘அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம்’ என்றருளியுள்ளார். –கி.ஆராவமுதன்

to get a copy of any article or the issue as a whole,
mail melathirumaligai@gmail.com

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:     ஸ்ரீவிஷ்ணுசித்தகு₃ரவே நம:

## திருவெள்ளறை மேலத்திருமாளிகை அம்மாள் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் மங்க₃ளாஶாஸநம்.

தி₃வ்யஜ்ஞாநம் பெற்றவர்களான ஆழ்வார்கள் ஸகல வேத₃ாந்த ஸாரார்த்த₂ங்களையும் செவிக்கினிய செஞ்சொல்லான தி₃வ்யப்ரப₃ந்த₄ங்கள் மூலம் உலகுக்கு அளித்தார்கள். ஸகல ஶாஸ்த்ரங்களையும் கரைகண்ட பூர்வாசார்யர்கள் அனைவரும் அந்த தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களிலேயே மிகவும் ஆழங்கால்பட்டார்கள். எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவரான எம்பெருமானார் 'திருப்பாவைஜீயர்' என்றே புகழப்பெற்றார். ஸகல ஶாஸ்த்ர பாரங்க₃தரான நம்பிள்ளை, போதுபோக்கும் அருளிச்செயலிலே யாம்படி விளங்கினார். 'செய்யமறை தன்னுடனே சேர்ந்து அருளிச்செயல் வாழி' என்று கொண்டாடினவர்கள் நம் பூர்வர்கள்.

ஒரு வஸ்துவைப் பார்ப்பதற்கு இரண்டு கண்களும் அவஶ்யமே ஆகும். 'ஒரு கடிகாரத்தைப் பார்ப்பதற்கு ஒரே கண் போதும், இருகண்கள் தேவையில்லை, என்பாருண்டோ? இரண்டு கண்கொண்டு பார்ப்பதால் ஒரே கடிகாரம் இரண்டாகக் காட்சியளிப்பதில்லை. ஆனாலும், ஒருபொருளைத் தெளிவாகப் பார்ப்பதற்கு இருகண்களும் இன்றியமையாதவையே. இருகண்கள் போலே விளங்கும் த்₃ராவிடவேத₃மும், ஸம்ஸ்க்ருத வேத₃மும் பரமாத்மாவாகிற ஸ்ரீமந்நாராயணனையே காட்டுகின்றன. ஆகவேதான் நம் பூர்வாசார்யர்கள் தென்கலையும் வடகலையும் திகழ்ந்த நாவராய் விளங்கினார்கள்.

வடமொழிமறை, தென்மொழிமறை இரண்டும் ஸ்ரீவைஷ்ணவ வுலகில் நன்கு ப்ரசாரமடைவதற்குத் திருவெள்ளறை தி₃வ்யதே₃ஶம் முக்₂யகாரணமாய்த் திகழ்ந்ததை அறியும் உலகெல்லாம். தி₃வ்யப்ரப₃ந்த₄ம் மூலம் உலகை உய்யக்கொண்ட புண்ட₃ரீகாக்ஷரான உய்யக்கொண்டார் தென்மொழிமறை நன்கு வளரக்காரணமானவர். ஸ்ரீப₄ாஷ்யப்ரசாரம் மூலம் வடமொழிவேத₃ாந்தம் நன்குவளரக்காரணமானவர் எங்களாழ்வான். இவ்விருவரும் திருவெள்ளறையில் அவதரித்த மஹான்கள்.

இவர்கள் இருவரின் பரிபூர்ண அநுக்₃ரஹம் பெற்றவர் புத்தூர் ஸுத₃ர்ஶநர் ஸ்ரீ உ.வே.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி. வடமொழி தென்மொழி வேத₃ாந்தங்கள் இரண்டும் ஜ்ஞாநப₄ாஸ்கரரான ஸுத₃ர்ஶநர் ஸ்வாமி மூலமே தற்போது விஶேஷமாகப் பரவிவருவதை அனைவரும் இசைந்தே தீருவர். அடியேன் ஏதோ சிறிது எழுதத் துணிகிறேன் என்றால்,



visit us at www.srivaishnavan.com

அதற்கு மூலகாரணம் புத்தூர்ஸ்வாமியின் விஶேஷகடாக்ஷமே. புத்தூரில் திகழ்பவர்களான பாலாஜி என்கிற ரகுராமன் ஸ்வாமியும், ஆராவமுதன் ஸ்வாமியும் ஸுத$_3$ர்ஶனர் ஸ்வாமியின் பரிபூர்ண கடாக்ஷத்துக்கு இலக்கானவர்கள்.

பாலாஜி ஸ்வாமியை ஆசிரியராகவும், ஆராவமுதன் ஸ்வாமியைத் துணை ஆசிரியராகவும் கொண்டு 'ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம்' என்ற இணையதளப் பத்திரிகை இப்போது வெளிவருகிறது. ஸ்ரீவைஷ்ணவ வுலகில் பீ$_4$ஷ்மபிதாமஹராக விளங்கும் ஸுத$_3$ர்ஶநர் ஸ்வாமியின் பரிபூர்ண அநுக்$_3$ரஹம் பெற்றுத் திகழும் இப்பத்திரிகை வெற்றிக்கொடியோடு வீறு நடைபோடும் என்பது திண்ணம். பரமனுக்குப் பல்லாண்டுபாடிய பட்டர்பிரான் திருவெள்ளறை எம்பெருமானை 'ஞானச்சுடரே' என்று விளித்தார். திருவெள்ளறை தி$_3$வ்யதம்பதிகளின் அநுக்$_3$ரஹம் பெற்று விளங்கும் இப்பத்திரிகை வைணவவுலகில் ஞானச்சுடராக விளங்கும் என்பது உறுதி.

அன்பர்களே,

விஶதவாக்ஶிகாமணிகளான மணவாளமாமுனிகள் பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான் வந்துதித்தபடியாலே ஜ்யேஷ்ட மாஸத்தை 'நல்லானி' என்று அருளிச்செய்துள்ளார். மற்ற ஆழ்வார்கள் விஷயமாக ஒரு பாசுரமோ அல்லது இரண்டு பாசுரங்களோ அருளிச்செய்த மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் பெரியாழ்வாருக்கு மட்டுமே ஐந்து பாசுரங்களை அருளிச்செய்துள்ளமையால் பெரியாழ்வாரின் பெருமை வெளிப்படுகிறது.

பொங்கும் பரிவுடைய பெரியாழ்வார் பிறந்ததாலும், ஆனைக்கோலம் செய்தாப்போலேயிருக்கிற ஈட்டை ஏடுபடுத்திய வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருநக்ஷத்ரத்தாலும், 'ஜக$_3$த்ரக்ஷாபரோऽநந்தோ ஜநிஷ்யதியபரோமுநி:'' என்று ப$_4$விஷ்யத்திலே ஏற்படவுள்ள மணவாளமாமுனிகளின் அவதாரத்தை முன்கூட்டியே (பேரருளாளப் பெருமாள் சொல்லக்கேட்டு) வெளிப்படுத்திய துன்னுபுகழ்க் கந்தாடை தோழப்பரின் தோற்றத்தாலும், ஸ்ரீஶைலேஶதயாபாத்ரத் தனியனின் அவதாரத்தாலும் சிறப்புபெற்ற மாதம் இம்மாதம்.

இவ்விதழில் அடியேனுடைய ஜ்ஞாநாசார்யரான கோமடம் ஸ்ரீ.உ.வே. ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமியின் கட்டுரையொன்று இடம்பெறுகிறது. மேலும், ஸ்ரீஶைலேஶதயாபாத்ரத்தனியன் அவதரித்த விதத்தினை விரிவாக விளக்கியுள்ளோம்.

நமது பத்திரிகையின் வளர்ச்சிப்பணிக்காக திருப்பதி மாடபூசி ஸ்ரீ.உவே.வரதராஜன்ஸ்வாமி ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். அவருக்கு அடியேனுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

–ஆசிரியர்.

visit us at www.srivaishnavan.com

visit us at www.srivaishnavan.com

## நம்பெருமாளும் நம்மணவாளமாமுனிகளும்

(ஸ்ரீரங்கம் கோமடம் ஸ்ரீ உ.வே.ஸம்பத்குமாராசார்யஸ்வாமி)

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பெரியபெருமாள் முதலாக பெரியஜீயர் (மாமுனிகள்) ஈருக ஆசார்ய பரம்பரையானது அநுஸந்தி$_4$க்கப் பட்டுவருகின்றது. ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் கடைக்குட்டி. அதுபோலே ஆசார்யர்களில் மணவாளமாமுனிகள் கடைக்குட்டி. மாமுனிகளுக்குப் பலபெருமைகள் உள்ளன. அவற்றில் தலைசிறந்த பெருமையாக ஸ்ரீவைஷ்ணவஉலகில் கருதப்படுமது, பெரியபெருமாளுக்கு ''ஈடு'' காலக்ஷேபம் ஸாதித்ததும், அதனாலேயே பெரியபெருமாளுக்கு ஆசார்யனானதும், அவராலே தனியனைப் பெற்றதுமாகும். இவ்விஷயத்தை இக்கட்டுரை மூலம் சிறிது விளக்குகிறேன்.

தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவாளன் திருப்பதிக்கு ஸம்ப்ரதாயத்தில் ''பெரியகோயில்'' என்றே ப்ரஸித்$_3$தி$_4$ உள்ளது. இத்தி$_3$வ்யதே$_3$ஶத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறவருக்கோ ''பெரியபெருமாள்'' என்றே பெயர் வழங்கப்படுகிறது. அவருக்கு வாய்த்த மனைவியோ ''பெரியபிராட்டியார்'' என்றே அழைக்கப்படுகிறாள். அவருக்கு வாய்த்த மாமனாரோ ''பெரியாழ்வார்'' எனப்படுகிறார். அவர் ஆனிமாதத்தில் கண்டருளும் திருமஞ்சனமோ ''பெரியதிருமஞ்சனம்'' எனப்படுகிறது. அவர் கண்டருளும் திருப்பாவாடையோ ''பெரிய திருப்பாவாடை'' என வழங்கப்படுகிறது. அவர் கண்டருளும் உத்ஸவமோ ''பெரிய திருவத்யயன உத்ஸவம்'' எனப்படுகிறது. இங்ஙனம் எல்லாம் பெரியதாகவே இருப்பது போன்று அவருக்கு வாய்த்த ஆசார்யரும் ''பெரியஜீயர்'' (மாமுனிகளின் பல பெயர்களில் ஒன்று) எனப்படுகிறார்.

ஆசார்யனுக்கு இருக்கவேண்டிய தன்மைகளை ஶாஸ்த்ரங்கள் விவரிக்கின்றன. அவற்றுள் யாவரும் அறிந்ததொரு இலக்கணம் பின்வருமாறு கூறப்படுகிறது. எவன் ஒருவன் ஶாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ள அர்த்த$_2$ங்களைச் சேகரித்தும், தான் அவற்றின்படி நடந்து காட்டியும், பிறரையும் அதன்படி நடந்துகொள்ளும்படியும் செய்கின்றானோ அவனே ஆசார்யன் எனப்படுகிறான். ''ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்த$_2$ாந் ஆசாரே ஸ்த$_2$ாபயத்யபி ஸ்வயம் ஆசரதே யஸ்து ஆசார்ய: ஸோபி$_4$தீ$_4$யதே'' என்னும் ப்ரமாணம் காண்க. இம்மாதிரியாகக் கூறப்பட்டுள்ள பல இலக்கணங்களையும் கொண்டவர் நம்மாமுனிகள்.

பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசநபூ$_4$ஷணஶாஸ்த்ரத்தில் ஆசார்யனுக்கு இருக்கவேண்டிய முக்$_2$யமான இலக்கணத்தைக் கூறுகிறார். அதாவது – ''நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதே$_3$ஶித்தவனை'' என்று. இந்த ஸூத்ரம் அற்புதமாக அமைந்துள்ளது. மந்த்ரம் என்னவில்லை; திருமந்த்ரம் என்னவில்லை; பெரியதிருமந்த்ரம் என்றருளிச்செய்கிறார். அப்படியென்ன பெருமை திருமந்த்ரத்திற்கு என்றால், உயர்ந்த பொருள் அனைத்தையும்

தன்னுட்கொண்டிருக்கையேயாகும். மேலும், எல்லாப் பலன்களையும் தரவல்லது. இம்மைச்செல்வத்தையோ,மறுமைச் செல்வத்தையோ, ஆத்மாநுப$_4$வம் என்கிற கைவல்யத்தையோ, ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வத்தையோ விரும்புவார்க்கு அவைகளைத் தரவல்லது. ஆயினும் மற்ற பலன்களில் நோக்கு இன்றியே மோக்ஷப$_2$லத்திலேயே நோக்குடையது. இதனை ''ஐஹலௌகிகம் ஐஶ்வர்யம் ஸ்வர்க$_3$ாத்$_3$யம் பாரலௌகிகம் l கைவல்யம் ப$_4$க$_3$வந்தஞ்ச மந்த்ரோயம் ஸாத$_4$யிஷ்யதி ll''என்கிற வசநம் கூறுகிறது. மேலும் ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிப்பது, மந்த்ரங்களுக்குள்ளே சிறந்த மந்த்ரமாகக் கருதப்படுவது இப்பெரியதிருமந்த்ரம். இப்படி சிறப்புபெற்ற திருமந்த்ரத்தை உபதே$_3$ஶித்தவனுக்கே ஆசார்யத்வ பூர்த்தி உள்ளது என்கிறார் பிள்ளைஉலகாசிரியர். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. திருமந்த்ரத்தை மட்டும் ஆசார்யன் உபதே$_3$ஶிப்பது கிடையாது. த்$_3$வயம், சரமஶ்லோகம் ஆகிய மற்ற இரண்டு ரஹஸ்யங்களையும் ஆசார்யனானவன் உபதே$_3$ஶிக்கிறான். அப்படியிருக்க, திருமந்த்ரத்தை மட்டும் உபதே$_3$ஶித் தவனையே ஆசார்யன் எனச்சொல்வது பொருந்துமா? ஆம்; பொருந்தும். திருமந்த்ரத்தில் மூன்று பத$_3$ங்கள் உள்ளன. அதில் முதல் பத$_3$ம் ப்ரணவம் (ஓம்). இதன் விவரணமே மற்ற இரண்டு பத$_3$ங்களும். ப்ரணவத்தாலே சொல்லப்படும் பொருள்யாதெனில், 'அ' என்ற எழுத்தால் சொல்லப்பட்ட ப$_4$க$_3$வானுக்கே 'ம' என்ற எழுத்தால் சொல்லப்பட்ட ஜீவாத்மா அடிமையாயிருக்கிறான் என்பதாகும். 'நம:' என்கிற பத$_3$ம் இதனை விவரிக்கிறது; தன்னை ரக்ஷித்துக்கொள்ள ஜீவனுக்கு உரிமையில்லை என்று. மேலும் ப$_4$க$_3$வானே உபாயம், ஆறு, வழி என்கிறது. 'நாராயணாய' என்ற மூன்றாவது பத$_3$மும் ப்ரணவத்தை விவரிக்கிறது. இதில் கூறப்படும் பொருள்:– ப$_4$க$_3$வானுக்கு எல்லாக் காலத்திலும் எல்லா தே$_3$ஶத்திலும் எல்லாவிதமான கைங்கர்யத்தையும் செய்யப்பெறுவேனாக வேணும்.

visit us at www.srivaishnavan.com

நம: பத$_3$த்தில் சொல்லப்பட்ட பொருளை த்$_3$வயத்தின் முன்வாக்ய மான 'ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே' விவரிக்கிறது. அதாவது–''ப்ரஹ்மசாரி நாராயணனை நான் உபாயமாகப் பற்றவில்லை. பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டு ஈஶ்வரன் திருவடிகளை உபாயமாகப்பற்றுகிறேன்''. எப்படிப்பற்றவேண்டும் என்பதனை சரமஶ்லோகத்தின் முன்பாதி விவரிக்கிறது. அதாவது ''ஸர்வத$_4$ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ''. இதனால் ''எல்லா த$_4$ர்மங்களையும் விட்டே என்னைப்பற்று'' என்று கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் விதி$_4$த்திருக்கின்றான். திருமந்த்ரத்தின் மூன்றாவது பத$_3$மான 'நாராயணாய' என்பதின் விவரணமே த்$_3$வயத்தின் பின்வாக்யமான ''ஸ்ரீமதே நாராயணாய நம:'' என்பதாகும். இதில் கூறப்படும் கருத்து ''பெரியபிராட்டியாரோடு கூடியிருந்துள்ள ஸர்வஶேஷியான நாராயண னுக்கே அடிமை செய்யவேண்டும்'' என்பதாகும். இவ்விருவருக்கும் செய்யும் கைங்கர்யம் எப்போது கிடைக்கும் என்றால் நம்பாபங்கள்

ஒழிந்தால்தான். அதனைத் தெரிவிக்கிறது சரமஶ்லோகத்தின் பின்பகுதியான ''அஹம் த்வா ஸர்வபாபேப்$_4$யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:'' என்பது. 'நான் உன்னுடைய எல்லாப் பாபங்களையும் போக்குவித்து மோக்ஷம் அடைவிக்கிறேன், கவலைப்படாதே' என்பது இதன் பொருள்.

ஆக, ப்ரணவத்தை நம: பத$_3$மும், நாராயணாய என்கிற பத$_3$மும் விவரிக்கிறது. 'நம:' என்ற பத$_3$த்தை த்$_3$வயத்தின் முன்வாக்யமும், இதனை சரமஶ்லோகத்தின் முன்பாதியும் விவரிக்கின்றன. 'நாராயணாய' என்ற பத$_3$த்தை த்$_3$வயத்தின் பின்வாக்யமும், இதனை சரமஶ்லோகத்தின் பின்பாதியும் விவரிக்கின்றன. திருமந்த்ரத்தில் சொல்லப்பட்ட அர்த்த$_2$த்தை மற்ற இரண்டு ரஹஸ்யங்களும் விவரிக்கின்றபடியால், திருமந்த்ரத்தை உபதே$_3$ஶித்தவனையே நேரே ஆசார்யன் என்று சொல்வதில் குறையொன்றுமில்லை. ஆக, ஸம்ஸார நிவர்த்தகமான பெரியதிருமந்த்ரத்தை உபதே$_3$ஶித்தவனே ஆசார்யன் எனப்படுவான்.

மாமுனிகள் அவ்வாறு உபதேஶித்திருக்கிறாரா? என்ற கேள்விக்கு விடையாகச் சிலவிஷயங்களை நினைவூட்டுகிறேன்.

நம்மாழ்வார் அருளிச்செய்த தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ங்கள் நான்கு. அவையாவன– திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி. இந்நான்கு ப்ரப$_3$ந்த$_4$ங்களுக்கும், மூன்று ரஹஸ்யங்களுக்கும் சேர்த்தியுண்டு. திருவிருத்தம் –ஓம், நம: என்ற இரண்டு பத$_3$ங்களின் பொருளைத்தெரிவிக்கிறது. திருவாசிரியம் 'நாராயணாய' என்ற பத$_3$த்தின் பொருளைத் தெரிவிக்கிறது. பெரியதிருவந்தாதி – சரமஶ்லோகத்தின் பொருளைத் தெரிவிப்பதாகும். திருவாய்மொழி த்$_3$வயத்தின் பொருளைத் தெரிவிப்பதாகும். இதனை அழகியமணவாளப்பெருமாள்நாயனார் ஆசார்யஹ்ருத$_3$யத்தில் மூன்று சூர்ணைகளாலே (208,209,210) அருளிச்செய்கிறார். 210 சூர்ணை ''த்$_3$வயார்த்த$_2$ம் தீ$_3$ர்க்க$_4$ ஶரணாக$_3$தி என்றது ஸாரஸங்க்$_3$ரஹத்திலே'' –ஆக த்$_3$வய விவரணம் தான் திருவாய்மொழி.

குங்குமத்தோள் அரங்கேசர் மாறன்மறைப்பொருள் கேட்க ஆசைகொண்டார். மாறன் கலைஉணவாகப்பெற்றவரான நம்மாமுனிகளைக் கொண்டே கேட்கவேணும் என்று இவரை அர்ச்சகமுகே$_2$ந அழைத்தருளினார். திருவாய்மொழியின் அர்த்த$_2$த்தை ''நாமும் நம் அடியாரும் வாழும்படி செல்வமிகு பெரியதிருமண்டபத்திலே செப்பும்' என அருள்பாடு இட்டார். நம்மாமுனிகளும்

''நாமார் பெரியதிருமண்டபமார், நம்பெருமாள்
தாமாக என்னைத் தனித்து அழைத்து–நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாள்தோறும்
வந்துரையாய் என்னுரையால் வாய்ந்து''

என்று அநுஸந்தி$_4$த்தருளினார்.

இங்கு நாம் கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. இத்திருவாய்மொழியின் அர்த்த$_2$த்தை வளர்த்த இதத்தாயான ராமானுசனைக் கொண்டு

visit us at www.srivaishnavan.com

கேட்டிருக்கலாம். திருவாய்மொழிப்பொருளை நன்கு உபந்யஸிக்கவல்ல ஸாமர்த்₂யம் பெற்றவரான நம்பிள்ளையைக் கொண்டு கேட்டிருக்கலாம். நம்பிள்ளை கோ₃ஷ்டி திருவரங்கத்தில் நடந்து கொண்டிருந்த சமயம், ஒருநாள் பெரியபெருமாள் இப்பெரிய திருவோலக்கத்தைக்காண ஆசைப்பட்டு எழுந்திருந்தார். உடனே அருகில் இருந்த கைவிளக்குப் பிச்சன் என்கிற கைங்கர்யபரன் ''ஓய், பெருமாளே— போய்ப் படும்'' என்றானும். இந்த வைப₄வம் படைத்த நம்பிள்ளையிடமும் கேட்கவில்லை.

பூர்வாசார்யர்கள் ஒருவருக்கும் கிடைக்காத பெருமையைப் பெரியபெருமாளே நம்மாமுனிகளுக்குத் தரவேண்டும் என்று திருவுள்ளம் பற்றியருளினார். காரணம் 'பிறர்மினுக்கம் பொறாமை இல்லாப் பெருமை'' படைத்தவர் மாமுனிகள். மாமுனிகளின் அர்ச்சாதிருமேனியை இன்றும் நாம் ஸேவிக்கிறோம். சிறிய திருமேனியுடன் திருவரங்கத்திலும், அவர் அவதரித்த ஆழ்வார்திருநகரியிலும் ஸேவைஸாதிக்கிறார். ''எம்பெருமானார் நல்லாட்சி புரிந்த இடம் பெரியகோயில். அவருக்கே பெருமை எல்லாம் இருக்கவேண்டும். எங்கே பெரியதிருமேனியாக எழுந்தருளப்பண்ணி மிகவும் கௌ₃ரவித்து விடுவார்களோ?'' என்று எண்ணி, 'நமக்கு அவ்வாறெல்லாம் கூடாது' என்று எண்ணியே சிறிய திருமேனியுடன் திருவரங்கத்தில் ஸேவைஸாதிக்கிறார்.

'ஆழ்வாருக்கே பெருமை எல்லாம் இருக்க வேண்டும், நமக்கு ஒருவிதப் பெருமையும் கூடாது' என்ற எண்ணத்தோடேயே ஆழ்வார் திருநகரியிலும் சிறிய திருமேனியோடு ஸேவைஸாதிக்கிறார். பெரியபெருமாள் இப்படிப்பட்ட பெருமை கொண்டவரையே தாம் ஆசார்யனாகக்கொள்ளத் தகும் என்று எண்ணினார். ஒருவருட காலம் உத்ஸவங்களையெல்லாம் நிறுத்தினார். ஈடுகாலக்ஷேபம் ஸாதிக்க இவரை நியமித்தார். இவரும் நடத்தினார். 'உயர்வற' தொடங்கி 'அவாவறச்சூழ்' என்கிற சாற்றுப்பாட்டு வரை ஐந்துவ்யாக்₂யாநங்களோடும் கூட, அவ்வவ்விடங்களில் இதுஶ்ருதி ப்ரக்ரியை, இது ஸ்ரீபாஷ்யப்ரக்ரியை, இது ஶ்ருதப்ரகாஶிகா ப்ரக்ரியை, இது ஸ்ரீராமாயண ப்ரக்ரியை; இது ஸ்ரீமஹாபாரதப்ரக்ரியை, இது வாக்யார்த்த₂ம். இது பத₃ார்த்த₂ம்— என்று விஶதவாக்ஶிகாமணிகள் என்ற பிருதுக்கேற்பவும், ஈட்டுப்பெருக்கர் என்கிற விருதுக்கேற்பவும் உபந்யஸித்தார். இவ்வுபந்யாஸத்தை தே₃வியர்கள் இருவருடன் அரங்கேசர் பெரியதிருமண்டபத்தில் கேட்கும் போது புன்சிரிப்பும் பாவனையும் கொண்டாராம். சாற்றுமுறையன்று தான் ஒருபாலகனாய் உருவெடுத்துக்கொண்டு ''ஸ்ரீஶைலேஶத₃யாபாத்ரம் தீ₃ப₄க்த்யாதி₃ கு₃ணார்ணவம் | யதீந்த்₃ர ப்ரவணம் வந்தே₃ ரம்யஜாமாதரம் முநிம்||'' என்ற தனியனையும் அருளிச்செய்தார்.

ராமனாக எம்பெருமான் அவதரித்த காலத்தில் ஆசார்யஸ்த₂ாநத்தில் உள்ள ஹனுமனுடைய வாக்₃வைப₄வத்தைக் கொண்டாடினான். அதாவது ஸுக்ரீவப்ரேரணையால் ராமனையும், இலக்குவனையும் காணவந்த ஹனுமன் இவ்விருவருடனும் சிலவார்த்தைகளைப் பேசினான். அப்போது ராமன்,

visit us at www.srivaishnavan.com

லக்ஷ்மணனைப்பார்த்து ‘ஜாக்ரதையாக ஹனுமனுடன் பேசு’ என்றார். ஏன்என்றால், ரிக்வேத₃ம் கற்றவனுக்கல்லது இம்மாதிரி பேச இயலாது, யஜுர் வேத₃ம் கற்றவனுக்கல்லது இம்மாதிரி பேச இயலாது, ஸாமவேத₃ம் கற்றவனுக்கல்லது இம்மாதிரி பேச இயலாது—எல்லா ஶாஸ்த்ரங்களையும் கசடறக்கற்றவன். ஆகையால் ஜாக்ரதையாகப் பேசு என்றானும். இதனை ‘‘நாந்ருக்₃வேத₃ விநீதஸ்ய நாயஜுர்வேத₃ த₄ாரிண: நாஸாமவேத₃விது₃ஷ: ஶக்யமேவம் ப்ரப₄ாஷிதும்’’ —இது முதலான ஸ்ரீராமாயண ஶ்லோகங்களிலே நாம் காணலாம். நம் ஸம்ப்ரதாயத்தில் சக்ரவர்த்தித் திருமகனை ராமனுக்கு ‘‘பெருமாள்’’ என்றே பெயர். பெருமாள் என்ற ராமனாலே ஆராதிக்கப்பட்டபடியாலே திருவரங்கநாதனுக்குப் பெரியபெருமாள் என்று பெயர். பெருமாள் எவ்வாறு திருவடி (ஹனுமன்)யினுடைய வாக்₃வைப₄வத்தைக் கொண்டாடினாரோ, அதுபோலே பெரியபெருமாளும் மாமுனிகளுடைய வாக்₃வைப₄வத்தைக் கொண்டாடினார். திருவரங்கர் சீர் அருளுக்கு இலக்காகப் பெற்ற பெருமை மாமுனிகள் ஒருவருக்கே தகும் என்பது ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்.

வேத₃த்தைத் தொடங்கும்போதும், வேத₃த்தை முடிக்கும்போதும் ‘ஓம்’ என்பதை அநுஸந்தி₄ப்பது வழக்கம். வடமொழிமறைக்கு ஓம்; தென்மொழி மறைக்கு ‘ஸ்ரீஶைலேஶ’த்தனியன். நம்மாழ்வார் அருளிய நான்கு ப்ரப₃ந்த₄ங்கள் என்ன, மங்கையர்கோன் ஈந்த ஆறு அங்கங்கள் என்ன, மற்ற எண்மர் அருளிய நன்மாலைகள் என்ன, இவற்றின் வ்யாக்₂யாநங்கள் என்ன, இவற்றின் ஸாரபூ₄தமான ரஹஸ்யங் கள் என்ன—இவற்றினுடைய ஆதி₃ அந்தங்களில் எல்லா தி₃வ்யதே₃ஶத்தில் உள்ளவர்களாலும் அநுஸந்தி₄க்கப்பட்டு வருவது இத்தனியன் தானே.

மணவாளமாமுனிகள் அவதரிக்கவில்லை என்றால் தமிழ்ஆரணமான தி₃வ்யப்ரப₃ந்த₄ங்கள் என்னவாயிருக்கும் என்பதனைக் கீழ்வரும் நான்கு அடிகளில் நாம் காணலாம்.

‘‘சேற்றுக்கமலவயல்சூழரங்கர் தம் சீர் தழைப்ப
போற்றித்தொழும் நல்லஅந்தணர் வாழவிப் பூதலத்தே
மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல்
ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே’’

ஶிஷ்யனானவன் தன் ஆசாரியனுடைய திருவத்யயந உத்ஸவத்தை நடத்துவது அல்லது கொண்டாடுவது என்கிற முறைக்கு ஏற்ப இன்றும் ஶிஷ்யரான பெரியபெருமாள் ஆசார்யரான பெரியஜீயருக்குத் திருவத்யயந உத்ஸவத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். இப்பெருமை மாமுனிகள் ஒருவருக்கே நம் ஸம்ப்ரதாயத்தில் உள்ளது.

அடியார்கள்வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ் நூல்வாழ – கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே !
இன்னமொரு நூற்றாண்டிரும்.

visit us at www.srivaishnavan.com

## ஸ்ரீஶைலேஶதயாபாத்ரத்தனியன் வைப$_4$வம்

### (பாலாஜி என்கிற ரகுராமன்)

ஶ்ரிய:பதியான எம்பெருமானை அவாப்தஸமஸ்தகாமன் என்பர் நம் முன்னோர். அவாப்தஸமஸ்தகாமன் என்றால் வேண்டிய விருப்பங்கள் யாவும் நிறைவேறப் பெற்றவன் என்று பொருள். அப்படிப்பட்ட எம்பெருமானுக்குப் புதிதாக அடையப்பட வேண்டியது என்பது ஒன்றுமே கிடையாது. ஆனாலும், சித$_3$சித்த்ரயத்துக்கும் மூவகைக் காரணமும் தானேயாய், 'அகாரம் பரம் ப்$_3$ரஹ்மோம்' (நாராயணோபநிஷத்) என்று வடமொழி மறை (திருவாய்.8–9–8)யிலும், 'மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயன்' (மூன்றாம் திருவ.92) என்று த்$_3$ராவிட$_3$வேத$_3$(ஸ்ரீர.ஸ்த.1–16)த்திலும் கூறப்பட்டபடியே தனக்கொரு காரணமில்லாதவனாயிருந்தும், ஒருகாலத்தில் தனக்கும் ஒரு காரணம் வேண்டுமென்று கருதி 'பிதரம் ரோசயாமாஸ தத$_3$ா த$_3$ஶரத$_2$ம் ந்ருபம்' என்று சக்ரவர்த்தியான தயரதனைத் தனக்குத் தந்தையாக விரும்பி ஏற்றதுபோலே, பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து (பெரிய திரு.3–4–9) 'பூர்வம் யோ வை வேத$_3$ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை' என்று மறைநான்கும் முன்னோதிய (பெரிய.திரு.7–3–6) பிரமகுருவாகிய பீதகவாடைப்பிரானார் (பெரியாழ் திரு.5–2–8) ஒருஸமயம் ஸத$_3$ாசார்யர் ஒருவரை ஸமாஶ்ரயணம்பண்ணவேண்டு மென்று ஆசைப்பட்டு அழகியமணவாளமாமுனிகளை ஆசார்யராக அடைந்தார்.

இத்தால், காரணத்திற்கெல்லாம் காரணனான அவன் தனக்கொரு காரணத்தை ஆசைப்பட்டதுபோலே, ஆசார்யர்களுக்கு முதல் ஆசார்யனான அவன் தனக்கும் ஓர் ஆசார்யன் உண்டாகவேண்டுமென்று விரும்பி மாமுனிகளை ஆசார்யராக அடைந்தான் என்பது சொல்லிற்றாயிற்று.

விப$_4$வாவதார காலத்திலே எம்பெருமானுக்குச் சில ஆசார்யர்கள் இருந்தனரே; அப்படியிருக்க மாமுனிகளை எதற்கு ஆசார்யராகக் கொள்ளவேண்டும்? எனில் விப$_4$வாவதார காலத்திலே அவனுக்கமைந்த ஆசார்யர்களுக்குச் சிலகுறைகளிருந்தபடியாலே, கல்யாணகு$_3$ணக்கடலான மாமுனிகளை அடிபணிய ஆசைகொண்டான்.

எம்பெருமான் ராமாவதார காலத்திலே விஶ்வாமித்ர முனிவருக்குச் சில நாள்கள் சீடனாகவிருந்தான். விஶ்வாமித்ரர் மேனகையைப் புணர்ந்தது, வஸிஷ்ட$_2$ரோடு போரிட்டது முதலான சரிதங்களை மிதி$_2$லைமாநகரில் ஶதாநந்த$_3$ர் கூறக்கேட்ட இராமன், ரஜஸ்தமோகு$_3$ணங்கள் மேலிட்டு இழிவான செயல்களைச் செய்த விஶ்வாமித்ரரைப் போய் நாம் அடிபணிந் தோமே என்று வருத்தமுற்றான். வஸிஷ்ட$_2$ரிடம் பொறாமைகொண்ட விஶ்வாமித்ரரைப் பணிந்த வருத்தம் தீர 'பிறர்மினுக்கம் பொறாமையில்லாப் பெருமை'(ஆர்த்தி)பெற்றவரான மாமுனிகளை ஆசார்யராகக்கொள்ள விரும்பினான்.

visit us at www.srivaishnavan.com

க்ருஷ்ணவதாரகாலத்தில் ஸாந்தீபினி முனிவன் ‘ஏஷ நாராயண:’ என்று ‘இவன் (க்ருஷ்ணன்) நாராயணனே’ என்பதனை நன்கறிந்திருந்தும், அவனிடம் பரமபுருஷார்த்த$_2$த்தை ப்ரார்த்தி$_2$த்துப்பெருமல், என்றோ ப்ரப$_4$ாஸதீர்த்த$_2$த்தில் மாண்ட தன் பிள்ளையைக் கொண்டுவந்து கு$_3$ருத$_3$க்ஷிணையாகக் கொடுக்கும்படி கேட்டான். ‘மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்’ (பெரியாழ். திரு 4–8–1) என்கிறபடியே ஆசார்யன் கேட்டதையே கொடுத்தாலும் ‘தனக்கும் தயிர்த்தாழிக்குமுட்பட மோக்ஷத்தைக் கேட்டுப் பெற்ற த$_3$தி$_4$ப$_4$ாண்டனுக்குண்டான ஜ்ஞானம் இம்முனிவனுக்கில்லாமல் போயிற்றே’ என்று குறைபட்டான் கண்ணன்.

இப்படி விப$_4$வாவதாரகாலத்தில் தனக்கமைந்த ஆசிரியர்கட்கு ஆசார்யத்வபூர்த்தி இல்லாமற்போனபடியாலே ஸத$_3$ாசார்யராயிருப்பார் ஒருவரை ஸமாஶ்ரயணம் பண்ணவேண்டுமென்று நினைத்தான் எம்பெருமான்.

மணவாளமாமுனிகள் கோயிலிலே (திருவரங்கத்திலே) த$_3$ர்ஶந நிர்வாஹம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தபோது ‘க்ருபயா பரயா ஸ ரங்க$_3$ராட் மஹிமாநம் மஹதாம் ப்ரகாஶயந்| லுலுபே$_4$ ஸ்வயமேவ சேதஸா வரயோகி$_3$ப்ரவரஸ்ய ஶிஷ்யதாம் ||’ (ஸ்ரீஶைலேஶாஷ்டகம்) என்று ஸ்ரீரங்க$_3$ராஜராகிய நம்பெருமாள் தம்முடைய மேலான கருணையினாலே மணவாளமாமுனிகளின் மஹிமையை வெளிப்படுத்தத் தாமே அவருக்கு ஶிஷ்யராக வேண்டுமென்று மநஸ்ஸாலே ஸங்கல்பித்துக்கொண்டார்.

### ப$_4$க$_3$வத்$_3$விஷயகாலக்ஷேபத்திற்கு அருளப்பாடு

ஆழ்வார்களின் அருளிச்செயலில் அளவற்ற ஆசையுடைய அரங்கன் ஒருமுறை ஆவணிமாஸம் திருப்பவித்ரோத்ஸவ சாத்துமுறையன்று ‘‘ஶ்ரோதும் த்$_3$ராவிட$_3$வேத$_3$பூ$_4$ரிவிவ்ருதிம் ஸௌம்யோபயந்துர் முநே: உத்கண்ட$_2$ாऽஸ்தி மமைநமாநயத தம் தார்க்ஷ்யாஶ்ரயம் மண்ட$_3$பம்| ஆவிஶ்யார்ச்சகமுசிவாநிதி முத$_3$ா..’’ (ஸ்ரீஶைலேஶாஷ்டகம்–2) என்கிறபடியே ‘தமிழ்வேத$_3$மான திருவாய்மொழியின் வ்யாக்$_2$யானத்தை அழகிய மணவாளமாமுனிகளிடம் கேட்கவேண்டுமென்ற ஆவல் எனக்குள்ளதாகையால் அவரை க$_3$ருட$_3$மண்ட$_3$பத்துக்கு அழைத்து வாருங்கோள்’ என்று அர்ச்சகரிடம் ஆவேஶித்து ஆநந்த$_3$த்துடன் ஆணையிட்டான்.

ஜீயரும் சடக்கெனப்புறப்பட்டு முதலிகளுடன் மங்க$_3$ளாஶாஸநத்திற்கு எழுந்தருளினர். ‘பலரடியார் முன்பருளிய’ (திருவாய் 7–10–5) என்கிறபடியே அணியரங்கன் திருமுற்றத்தடியார்கள் நிறைந்திருந்த அவ்விடத்திலே, ஜீயரைத்தனித்து அருள்பாடிட்டு ஸ்ரீஶட$_2$கோபனை ஸாதித்து ‘நாளைமுதல் நம்முடைய பெரியதிருமண்ட$_3$பத்திலே

visit us at www.srivaishnavan.com

பெரியவண்குருகூர்நம்பியான நம்மாழ்வாருடைய திருவாய்மொழியின் பொருளை ஈடுமுப்பத்தாறுயிரத்துடனே நடத்தும்' என்று நியமிக்க, மாமுனிகளும்

நாமார் பெருஞ்சீர்கொள் மண்டபத்து நம்பெருமாள்
தாமாக வந்து தனித்தழைத்து நீ மாறன்
செந்தமிழ்வேதத்தின் செழும்பொருளை நாடோறும்
வந்துரையாய் என்னுரையால் வாய்ந்து

என்று கூறி மகிழ்ச்சியுற்றுர். இதனை அப்பிள்ளார்

நல்லதோர் பரீதாபி வருடந்தன்னில் நலமான ஆவணியின் முப்பத் (தொன்றில்
சொல்லரிய சோதியுடன் விளங்குவெள்ளித்
தொல்கிழமை வளர்பக்க நாலாநாளில் செல்வமிகு பெரிய திருமண்ட (பத்தில்
செழுந்திருவாய்மொழிப்பொருளைச் செப்புமென்று
வல்லியுறை மணவாளர் அரங்கர் நங்கண் மணவாளமாமுனிக்கு வழங்கினுரே

(சம்பிரதாய சந்திரிகை) என்றருளிச்செய்துள்ளார்.

**ப₄க₃வத்₃விஷயகாலக்ஷேபம்**

பிற்றைநாள் 'மாறன்மறைப்பொருள் கேட்க மணவாளமாமுநியை ஏறுமணைதனிலிருத்தி' (ஸ்ரீசைலவைப₄வம்–1) என்கிறபடியே மாமுனிகளை ஆஸனத்திலே அமரச்செய்து 'தேவியர்கள் இருவருடன் சீரரங்கேசர் திகழ்திருமாமணிமண்டபத்தில் வந்து' என்கிறபடியே உப₄யநாய்ச்சிமாருடனே தி₃வ்யஸிம்ஹாஸனத்திலே ஏறியருளி ஸேநாபதி யாழ்வானேடும், 'ஶட₂வைரிமுகை₂: ஶ்ருண்வந் தே₃ஶிகைர் தி₃வ்யதா₃ர்ஶநை:' என்கிறபடியே நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும், தி₃வ்யஜ்ஞாநம் பெற்றவர்களான நாத₂முநி, யதிவர ப்ரப்₄ருதிகளோடும், ஸ்ரீரங்க₃நாராயணஜீயர், திருமாலைதந்தப₄ட்டர் முதலாணுரோடும், அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழு வோடும்கூடப் பேரோலக்கமாகவிருந்து 'தெருளுடைய வியாக்கியை ஐந்துடனே கூட்டி'(சம்பிரதாய சந்திரிகை–9) என்கிறபடியே நம்பிள்ளை ஈடு முதலான ஐந்து வ்யாக்₂யாநங்களுடன் 'தாவிதமாய் இந்த உலகோர்கள் வாழ, தமிழ்மறையை வரமுனிவன் உரைக்கக்' கேட்டனன்.

குஶலவர்கள் பாடியபோது இராமபிரான் ஸீதையைப் பிரிந்திருந்ததால் ஸ்ரீராமாயணத்தைத் தனித்தே கேட்டான். ஆனல், நம்மாழ்வார் பாடினபோது 'இன்பம்பயக்க எழில்மலர்மாதரும் தானும்' (திருவாய்.7–10–1) என்று பிராட்டியோடு கூடியிருந்து திருவாய்மொழி யைத் திருவாறன்விளையில் திருச்செவிசாத்தினுன். இங்கே மாமுனிகளின் ப₄க₃வத்₃விஷயகாலக்ஷேபத்தை ஸ்ரீராமாயணத்தைப்போலே



visit us at www.srivaishnavan.com

தனிக்கேள்வியாகவல்லாமல் திருவாய்மொழிகேட்டதுபோலே துணைக்கேள்வியாகக் கேட்டனன்.

நம்பெருமாள், தாம் அருளிச்செயல் வ்யாக்$_2$யானரஸத்தைப் பருகுவதற்கு இடையூறு என்று கருதி 'ஆவணிமாசந் தொடங்கி நடக்குநாளில் அத்யயநத்திருநாள் அரங்கநாதர் தாவமற' என்கிறபடியே ஒருஸம்வத்ஸரகாலம் எல்லா உத்ஸவங்களையும் நிறுத்தினர். தாரணியும் அரங்கருக்குத் தமிழ்மறைத் தேசிகரான மாமுனிகள் மாறன்மறை முப்பத்தாறுயிரத்தை நிர்வஹிக்கும்போது அவ்வவ்விடங்களிலே– இது ஶ்ருதி ப்ரக்ரியை, இது பாஞ்சராத்ர ப்ரக்ரியை,இது ஸ்ரீராமாயண ப்ரக்ரியை, இது மஹாப$_4$ரத ப்ரக்ரியை, இது ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியை, இது மஹாப$_4$ாக$_3$வத ப்ரக்ரியை,இது ஸ்ரீப$_4$ாஷ்ய ப்ரக்ரியை,இது ஶ்ருத ப்ரகாஶிகா ப்ரக்ரியை,இது கீ$_3$தாப$_4$ாஷ்ய ப்ரக்ரியை, இது பத$_3$ார்த்த$_2$ம், இது வாக்யார்த்த$_2$ம், இது மஹாவாக்யார்த்த$_2$ம்,இது ஸமபி$_4$வ்யாஹாரார்த்த$_2$ம், இது த்$_4$வந்யர்த்த$_2$ம், இது அர்த்த$_2$ரஸம், இது ப$_4$ாவரஸம், இது ஒண் பொருள், இது உட்பொருள் – என்று அருளிச்செய்வர். 'போதமணவாள மாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பூரித்து நின்ற பெருமாள்' (ஸ்ரீரங்கத்தில் அரையர் கொண்டாட்டம்) என்றும் 'பொருளுரைக்கும் போதெல்லாம் பெருமாளுக்குப் புன்சிரிப்பும் பாவனையும் மகிழ்வும் கொள்ள' என்றும் சொல்லுகிறபடியே நம்பெருமாள் காலக்ஷேபம் கேட்கும்போது அவ்வப்போது உசிதமான முகக்குறிப்பின்மூலமும், புன்சிரிப்பின்மூலமும் தமது உகப்பின் மிகுதியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

'ரங்கீ$_3$ வத்ஸரம் ஏகம் ஏவம் அஶ்ருணோத் வ்யக்தம் யதோ$_2$க்த$_2$ க்ரமாத்' (ஸ்ரீஶைலேஶாஷ்டகம்–2) (இவ்வண்ணம் ஸ்ரீரங்கராஜன் மாமுனிகளால் முறையே தெளிவாகச் சொல்லப்பட்ட அர்த்த$_2$விஶேஷங்களை ஒருவருடம் திருச்செவிசாற்றினன்) என்கிறபடியே ஒருஸம்வத்ஸரம் காலக்ஷேபம் கேட்ட நம்பெருமாள் சாற்றுமுறையன்று அருளிச்செயல் வ்யாக்$_2$யாநங்களின் பெருமையையும், பெரியஜீயரின் ப்ரப$_4$ாவத்தையும் வெளிப்படுத்தத் திருவுள்ளமானர்.

**ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரத் தனியன் அவதரித்தல்**

பரீதாபி வருடத்திற்கு அடுத்த வருடத்திலே ஆனிமாஸம் பௌர்ணமி திதி$_2$யும், திருமூலநக்ஷத்ரமும் ஞாயிற்றுக்கிழமையும் கூடிய மதிநிறைந்த நன்னு(திருப்பாவை 1)ளிலே சாற்றுமுறை நடைபெற்றது. சாற்றுமுறையான அடுத்தவிநாடி அர்ச்சகமுக$_2$த்தாலே நம்பெருமாள் 'ஜீயரே! முப்பத்தாறுயிரப்பெருக்கர் என்னுமது கண்டோம். இன்று முதல் வானவரும் நீரிட்ட வழக்கேயாவர்' என்றருளினர். இதனை அப்பிள்ளார் சம்பிரதாய சந்திரிகையில்

visit us at www.srivaishnavan.com

“ஆனந்த வருடத்தில் கீழ்மையாண்டில் அழகான வருடத்தில் மூலநாளில் பானுவாரங்கொண்ட பகலில் செய்ய பௌரணையின் நாளிட்டுப் பொருந்தி ஆநந்தமயமான மண்டபத்தில் அழகாக மணவாளர் ஈடுசாத்த (வைத்தே வானவரும் நீரிட்ட வழக்கே என்ன, மணவாளமாமுனிகள் களித்திட்டாரே” என்று அருளிச்செய்தார்.

ஸமாப்தௌ க்₃ரந்த₂ஸ்ய ப்ரதி₂தவிவிதே₄ாபாயநசயே
பரம் ஸஜ்ஜீபூ₄தே வரவரமுநேரங்க்₄ரிஸவிதே₄ ।
ஹட₂ாத்₃ப₃ால: கஶ்சித்குத இதி நிரஸ்தோப்யுபக₃த:
ஜகௌ₃ ரங்கே₃ஶாக்₂ய: பரிணத சதுர்ஹாயந இத₃ம் ॥
(ஸ்ரீஸைலேஶாஷ்டகம்–5)

(ஈடுமுப்பத்தாறுயிர க்₃ரந்த₂த்தின் சாற்றுமுறையின்போது அடைக்காய், பழம் முதலான ப்ரஸித்₃த₄மான பல உபஹாரங்கள் வைக்கப்பட்ட வளவில், நான்குவயது பூர்த்தியான ரங்க₃நாயகம் என்கிற சிறுவனொருவன் சடக்கென அங்கேவர, ‘நீ எங்கே வருகிறுய், அப்பாலே போ’ என்று தடுத்தபோதிலும் மாமுனிகளின் திருவடிக்கருகில் வந்துநின்று இத்தனியனைச் சொன்னுன்) என்கிறபடியே ஆசார்யஸம்ப₄ாவனைக்காக த்₃ரவ்யங்கள் ஸித்₃த₄மாக வைக்கப்பட்டவுடனே அழகியமணவாள ப₄ட்டர் என்ற அர்ச்சகருடைய குமாரரான அரங்கநாயகம் என்ற ஐந்துவயது ப₃ாலகன் ஸம்ப₄ாவனைத் தட்டுகளுக்கும், பெருமாளுக்கும் நடுவே வந்து நின்று கைகளைக் கூப்பிக்கொண்டு அனைவருடைய கவனத்தையும் தம்பக்கல் ஈர்த்து, உரத்தகுரலில் ‘ஸ்ரீஸைலேஶத₃யா பாத்ரம் தீ₄ப₄க்த்யாதி₃ கு₃ணார்ணவம்। யதீந்த்₃ரப்ரவணம் வந்தே₃ ரம்யஜாமாதரம் முநிம்॥ (திருமலையாழ்வாரின் கருணைக்குக் கொள்கலமான வரும், ஜ்ஞாநம் ப₄க்தி வைராக்யம் முதலிய கு₃ணங்களுக்குக் கடல் போன்றவரும், எம்பெருமானுரிடத்தில் மிகவும் ஈடுபட்டவருமான அழகியமணவாள மாமுனிகளை வணங்குகிறேன்.)என்று கூறிவிட்டோடி மறைந்தான். அரங்கநாயகத்தைத் தேடிப்பிடித்து வந்து, இன்னமொரு தடவை அந்த ஶ்லோகத்தைச் சொல் என்று நிர்ப₃ந்தி₄த்தபோது, அவன் ‘எனக்கொன்றுமே தெரியாது, நான் இன்று கோயிலுக்கு வரவேயில்லை’ என்றுன். அரங்கனே அரங்கநாயகத்தினுருவில் வந்து ஆசார்யனுக்குத் தனியன் ஸமர்ப்பித்துள்ளார் என்றறிந்து அனைவரும் ஆஶ்சர்யமும், அகமகிழ்ச்சியும் அடைந்தனர். பெரியோர்கள் இந்த ஶ்லோகத்தைப் பட்டோலைகொண்டு மஞ்சட்காப்பு சாத்தி மாமுனிகள் திருவடிகளிலே ஸமர்ப்பித்தனர்.

வானமாமலைஜீயர், கோயில் கந்தாடையண்ணன், எறும்பியப்பா, ப்ரதிவாதிபயங்கரம் அண்ணு முதலான பெரியோர்கள் பெரியஜீயரிடத்தில் தங்களுக்குண்டான அன்பின்மிகுதியாலே சில ஶ்லோகங்களைச்

visit us at www.srivaishnavan.com

சாற்றுமுறையன்று தனியனாக ஸமர்ப்பிக்க எண்ணினார்கள். ஆனால் அரங்கன் அவர்களை முந்திக்கொண்டு அந்த ஶ்லோகங்களின் உட்பொருளைத் தன்னகத்தே கொண்டதான 'ஶ்ரீஶைலேஶத$_3$யாபாத்ர'த் தனியனை அருளிச்செய்துவிட்டான் என்பர் ஆன்றோர்.

இவ்விஷயம் பழநடைவிளக்கத்தில் வேறுவித$_4$மாகக் கூறப்பட்டு ள்ளதால் அதனையும் இங்கே கூறுகிறோம். அதாவது சாத்துமுறைக்கு முதல்நாள் வானமாமலைஜீயரும், கந்தாடையண்ணனும், ப$_4$ட்டர்பிரான் ஜீயரும் சேர்ந்து சிந்தித்து இருவர் இரண்டடியும், ஒருவர் இரண்டடியுமாக மூவரும் நாலடியான ஒருதனியனைச் செய்து, பிறர் ஒருவரும் அறியாதபடி மிகவும் ரஹஸ்யமாக வைத்துக்கொண்டு நாளை சாத்துமுறை முடிவிலே பெரியதிருமண்ட$_3$பத்திலே பெரியபெருமாளுடைய திருவோலக்கத்திலே விண்ணப்பம் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். சாற்றுமுறையானவுடன் இம்மூவரும் தாங்கள் இயற்றிய தனியனை விண்ணப்பம் செய்வதற்கு முன்னே, அதே ஶ்லோகத்தை மிகவழகிய சிறுவனொருவன் சொல்லி மறைந்து போனது கண்டு மிகவும் வியப்படைந்தனர். இம்மூவரும் பிறரொருவருமறியாமல் நாமறிந்ததான இந்தத் தனியனை, நமக்கு முன்னே வந்து ப$_3$ாலகன் கூறியதால், இவன் ஸர்வாந்தர்யாமியான ரங்க$_3$நாத$_2$னே என்று அங்கிருந்த அனைவருக்கும் தாங்கள் நினைத்திருந்த செய்தியைக் குலாவிக்குலாவிச் சொன்னார்கள்.

**வாழித்திருநாமமியற்ற ஆணையிடல்**

பின்பு நம்பெருமாள் தமிழிலே அதிசதுரரான அந்தப்பிள்ளை என்ற ஒருவருக்கு அருளப்பாடு ஸாதித்து 'நீர் ஜீயர் விஷயமாக வாழித்திருநாமம் இயற்றும்' என்று நியமிக்க; அவரும்

வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும் மணவாளமாமுனிவன் –வாழியவன்
மாறன்திருவாய்மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படியுரைக்கும் சீர்.
செய்யதாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே.

visit us at www.srivaishnavan.com

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ–கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே!
இன்னமொரு நூற்றாண்டிரும்.

என்று ஓதினர். நம்பெருமாளும் அவருக்கு ஸ்ரீஶட2கோபன் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்துப் போர க்ருபை பண்ணியருளினர்.

**தி3வ்யதே3ஶங்களுக்கு அழகியமணவாளனின் ஆணை**

'ஸ்ரீஶைலேஶேதி பத்3யம் க2க3பதிநிலயே மண்ட3பே தத்ஸமாப்தௌ உக்த்வாऽத்4யேதவ்யம் ஏதந்நிகி2லநிஜக்3ருஹேஷ்வாதி3ஶத் தத்தத3ாதௌ3ஸ' (ஸ்ரீஶைலேஶாஷ்டகம்–6) என்றும், 'ஸ்ரீஶைலேஶேதி பத்3யம் ப்ரத2மமத2 ஸதாம் ஸம்ப்ரத3ாயைக நிஷ்டை2: லக்ஷ்மீநாதே2தி பத்3யம் ஸ்வயமிதி ப4க3வாந் ஆதி3ஶத் ரங்க3நாத2:' (ஸ்ரீஶைலேஶாஷ்டகம்–7) என்றும் 'தேசமெங்கும் ஈது திருப்பதிகள் தோறுரைக்க நேசமுற அரங்கர் நேமித்தார்' (ஸ்ரீசைலவைபவம்–7) என்றும் சொல்லுகிறபடியே 'இன்றுமுதல் நம்வீடு முதலான திருப்பதிகள் எல்லாவற்றிலும் அநுஸந்த4ானகாலங்கள்தோறும் ஸத்ஸம்ப்ரத3ாயநிஷ்ட2ர்களாலே முந்துறமுன்னம் மாமுனிகள்விஷய மான ஸ்ரீஶைலேஶத3யாபாத்ரத்தனியன் சொல்லப்பட்டு, லக்ஷ்மீநாத2 முதலிய தனியன்களோடு தி3வ்யப்ரப3ந்த4ம் தொடங்கப்படவேண்டும்' என்றும், தி3வ்யப்ரப3ந்த4 சாற்றுமுறையானவுடன் 'வாழி திருவாய்மொழிப் பிள்ளை' என்று தொடங்கி 'மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்' என்று அநுஸந்தி4த்தே தலைக்கட்டப் படவேண்டும்' என்றும் நம்பெருமாள் தாமே நியமனம் செய்து ஸேனைபதியாழ்வான் மூலமாகத் திருமலை, பெருமாள் கோவில் முதலான தி3வ்யதே3ஶங்களுக்கு ஸ்ரீமுக2ம் அனுப்பினர். இதுதன்னை

'ஸ்ரீபந்நக3ாதீ4ஶமுநே: பத்3யம் ரங்கே3ஶப4ாஷிதம் ।
அஷ்டோத்தரஶதஸ்த2ாநேஷ்வநுஸந்த4ாநமாசரேத் ॥
இத்யாஜ்ஞாபத்ரிகா விஷ்வக்ஸேநேந ப்ரதிபாதி3தா ।
தத3ாரப்4ய மஹத்3பி4ஶ்ச பட்2யதே ஸந்நிதே4: புரா ॥

(மணவாளமாமுனிகள் விஷயமாக ஸ்ரீரங்க3ராஜனாலே அருளிச்செய்யப் பட்டது இந்த ஶ்லோகம். 'நூற்றெட்டு தி3வ்யதே3ஶங்களிலும் ப்ரப3ந்த4ாரம்ப4த்திலே இதனை அநுஸந்தி4க்கக்கடவர்கள்' என்று ஸேனைமுதலியாரால் நியமனபத்திரிகை அனுப்பப்பட்டது. அது முதற்கொண்டு பெரியோர்களால் இந்த ஶ்லோகம் ப4க3வத்ஸந்நிதி4யில் அநுஸந்தி4க்கப்படுகிறது) என்கிற ப்ரமாணத்தாலும் அறியலாம்.

**ப3த3ரீநாராயணன் ப்ரவர்த்தித்த ப்ரகாரம்**

ப3த3ரிகாஶ்ரமத்திற்குச் சென்ற அடியார்கள் இருவர், ப3த3ரிநாராயண

visit us at www.srivaishnavan.com

னைத் திருவடிதொழுது 'அடியோங்கள் உஜ்ஜீவிக்கும்படியாக ஓர்அர்த்த$_2$ விஶேஷத்தை அருளிச்செய்யவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, ப$_3$த$_3$ரிநாராயணன் 'ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்' என்று பாதிஶ்லோகத்தைச் சொல்லி, 'நீங்கள் இரண்டாற்றிற்கு இடைப்பட்ட தலையான தி$_3$வ்யதே$_3$ஶமான திருவரங்கத்திற்குச் செல்லுங் கோள். உத்தரார்த்$_3$த$_4$த்தை (பின்பாதியை) அங்கே சொல்லுவோம்' என்றான். அவர்களும் திருவரங்கம் வந்து சேர்ந்து திருக்காவிரியில் தீர்த்தமாடிக் கோயிலுக்குள் நுழைந்தார்கள். அன்றைய தினமே மாமுனிகளின் ப$_4$க$_3$வத்$_3$விஷயகாலக்ஷேப சாத்துமுறைதினம். அவ்விருவரும் சாத்துமுறையானவுடன் அரங்கநாயகத்தினுருவில் அரங்கனே இத்தனியனைக் கூறக்கேட்டு அளவில்லா ஆநந்த$_3$ம் அடைந்தனர். இதனை அப்பிள்ளார்

வதரியாச்சிராமத்தில் இருமெய்த் தொண்டர்
வகையாக நாரணனை அடிவணங்கி
கதியாக ஓர்பொருளை அளிக்கவேண்டும்
கண்ணனே! அடியே(ா?)ங்கள் தேறவென்ன
சதிராகச் சீர்சைல மந்திரத்தின்
சயமான பாதியை ஆங்கு அருளிச்செய்து
பதியான கோயிலுக்குச் சென்மின் நீவீர்
பாதியையும் சொல்லுதும் யாம் தேறவென்றார்— என்றும்,
சென்றவர்கள் இருவருமே சேரவந்து
திருவரங்கன் தினசரியைக் கேளா நிற்ப
சந்நிதிமுன் கருடாழ்வார் மண்டபத்தில்
தாம் ஈடு சாத்துகின்ற சமயம் தன்னில்
பொன்னிதனில் நீராடிப் புகழ்ந்துவந்து
புகழரங்கர் சந்நிதிமுன் வணங்கிநிற்ப
சந்நிதியில் நின்று அரங்கர் தாமே அந்தத்
தனியன் உரை செய்து தலைக்கட்டினரே

என்றும் சம்பிரதாயசந்திரிகை(4,5)யில் அநுஸந்தி$_4$த்தருளினர்.

மேலும், அயோத்திராமாநுஜத$_3$ாஸர் என்பவர் ப$_3$த$_3$ரிநாராயணனை நெடுநாள் ப்ரீதியோடு ஆராதி$_4$த்துவந்தார். அவருடைய ப$_4$க்தியினாலே ப்ரஸந்நனான ப$_3$த$_3$ரிநாராயணன் திருவரங்கத்திலே மேலே அவதரிக்கப் போகிற இந்தத் தனியனை முன்கூட்டியே அவருக்கு உபதே$_3$ஶித்து 'காலையிலும் மாலையிலும் ப்ரப$_3$ந்த$_4$ம் தொடங்குவதற்கு முன் இந்த ஶ்லோகத்தை அநுஸந்தி$_4$த்து வாரும்' என்று நியமித்திருந்தான். இப்படி ப$_3$த$_3$ரீநாராயணன் இத்தனியனை ப்ரவர்த்தித்ததைத் திருவுள்ளத்தில் கொண்டே கோயில் கந்தாடையண்ணன்

visit us at www.srivaishnavan.com

‘வாசியறிந்த வதரியில் நாரணனுர் மனங்கொள்
தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர்தழைப்பச்
சீசயிலேச தயாபாத்திரமெனும் சீர்மந்திரம்
தேசிகனுய்க் கண்டுரைத்தான் இவ்வையகம் சீருறவே’ (மணவாள மாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு–13) என்று அருளிச்செய்தார்.

திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரம் எனப்படும் பெரியதிருமந்த்ரத்தை முதன்முதலில் வெளிப்படுத்தியவன் ப$_3$த$_3$ரிநாராயணனே. அவன் திருமந்த்ரார்த்த$_2$மான இத்தனியனையும் தாமே முதலில் வெளிப்படுத்த வேண்டும் என்று முந்திக்கொண்டான் போலும்.

**வரத$_3$நாராயணகு$_3$ரு திருமாளிகையில் வியப்பான நிகழ்ச்சி**

கோயிலில் ஈடுசாத்துமுறை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது கோயில்அண்ணன் என்றழைக்கப்படும் வரத$_3$நாராயணகு$_3$ருவின் திருமாளிகையில் பேரறிவுபடைத்த பெண்பிள்ளைகள், அண்ணனின் தே$_3$வியாருடன்கூடி ஜீயருடைய வைப$_4$வத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். ‘ஹட$_2$ாத் தஸ்மிந் க்ஷணே கஶ்சித்வர்ணீ ஸம்ப்ராப்ய பத்ரிகாம்। வாதூ$_4$லவரத$_3$ாசார்யத$_4$ர்மபத்ந்யா: கரே த$_3$தெ$_3$ள॥’ (திடீரென்று அந்த நொடியிலே ஒரு ப்$_3$ரஹ்மசாரி வந்து வாதூ$_4$லவரத$_3$ாசார்யருடைய (கந்தாடையண்ணனுடைய)தே$_3$விகள் கையில் ஓர்ஓலையைக் கொடுத்தான்) என்கிறபடியே ஒரு ப்$_3$ரஹ்மசாரி வந்து அண்ணனுடைய தே$_3$விகள் கையிலே ஓலையொன்றைக் கொடுத்து ‘இதனை அண்ணன் திருக்கையிலே ஸமர்ப்பியுங்கோள்’ என்று கூறினுன். அவரும் அதனை வாங்கி வாசித்து ‘ஜீயர் விஷயமாகச் சிறந்ததொரு ஶ்லோகம் எழுதப்பட்டுள்ளதே’ என்று மகிழ்ந்து, வந்த ப்$_3$ரஹ்மசாரியை ஸத்கரிக்கப் பார்க்க, அவரை அங்கே காணுததால், எல்லாரும் எழுந்திருந்து எங்கும் தேடியும் அவரைக் காணமுடியாமல்போகவே, ‘இது எம்பெருமானுடைய விளையாட்டே’ என்றறிந்து, உடனே பெரியதிருமண்ட$_3$பத்திற்குச் சென்று முறியை ஸமர்ப்பித்து நடந்ததை விண்ணப்பம் செய்தனர். முறியில் எழுதப்பட்டிருந்த ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரத் தனியனைப் பார்த்து ‘எம்பெருமான் ப$_3$ஹுமுக$_2$மாக இத்தனியனை ப்ரகாஶித்தருளுவதே’ என்று அனைவரும் ஆஶ்சர்யப்பட்டனர்.

நம்பெருமாள் பெரியஜீயருக்கு தீர்த்த$_2$ப்ரஸாத$_3$ம், திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீஶட$_2$கோபம் முதலான ஸகலவரிசைகளையும் ப்ரஸாதித்தருளினர். கோயில் அனைத்துக்கொத்து பரிஜநங்களும் திருவீதி ப்ரத$_3$க்ஷிணமாக மாமுனிகளை மட$_2$த்திற்கு அழைத்துச்சென்றனர். அன்றுமுதல் குழந்தைகள், இடையர் முதலான பொதுஜநங்கள் எல்லாரும் பெரியஜீயரின் அதிமானுஷமான வைப$_4$வத்திலே ஈடுபட்டு அவருடைய நாமகு$_3$ணங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

visit us at www.srivaishnavan.com

இத்தனியனுக்கு இன்னம் பல பெருமைகளுண்டு. தென்னனுயர் பொருப்பில் அழகரும், தெய்வவடமலைஅப்பனும் இதற்கு ப்ரவர்த்தகர்களாவார்கள்.

**பரமஸ்வாமி, பத்$_3$யத்தை ப்ரகாஶப்படுத்திய ப்ரகாரம்**

திருமாலிருஞ்சோலையில் மூலவருக்கு பரமஸ்வாமி என்று திருநாமம். அவ்வெம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதற்கென்றே மணவாளமாமுனிகள் தமது ஶிஷ்யரான யதிராஜஜீயரை அங்கே அனுப்பியிருந்தார். அந்த யதிராஜஜீயர் ஒருநாள் தமதாசார்யரான மணவாளமாமுனிகளின் கு$_3$ணங்களை நினைத்துக்கொண்டே ஸந்நிதி$_4$யில் ப்ரத$_3$க்ஷிணம் செய்து, தாம் எப்போதும் அநுஸந்தி$_4$க்கும்படி மாமுனிகள் விஷயமான தனியன் பெரியோர்களிடமிருந்து உண்டாகவேண்டும் என்று மனத்திலே நினைத்துக்கொண்டே ஸேநைமுதலியார் ஸந்நிதி$_4$யில் வணங்கிநின்றார். அப்போது அங்கு அர்ச்சகர் ஸேநைமுதலியாருக்குத் திருவாராதனம் செய்து திருவந்திக்காப்பு கண்டருளப்பண்ணி

ஸ்ரீஶைலஸூந்த$_3$ரேஶஸ்ய கைங்கர்ய நிரதோயதி: ।
அமந்யத கு$_3$ரோஸ் ஸ்வஸ்ய பத்$_3$யஸம்ப$_4$வமார்யத: ॥

(திருமாலிருஞ்சோலையழகருடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டுள்ள ஜீயர் தமது ஆசார்யரான பெரியஜீயருக்குத் தனியன் பெரியோர்கள் வாக்கிலிருந்து வெளிப்படவேண்டும் என்று எண்ணினர்) என்று விண்ணப்பம் செய்து பெருமாள் ஸந்நிதி$_4$யிலே அமுதுசெய்தருளப் பண்ண எழுந்தருளினர்.

அவ்வமயம் மணவாளமாமுனிகள் சீடர்களுள் ஒருவரான ஸேநைமுதலியார் என்பவர் தென்திசையிலுள்ள தி$_3$வ்யதே$_3$ஶங்களை யெல்லாம் ஸேவித்துவிட்டு, திருமாலிருஞ்சோலைமலை அழகரைத் திருவடி தொழுவதற்காகக் கோயிலினுள்ளே நுழைந்தார். ஸ்ரீகார்யநிர்வாஹகரான யதிராஜஜீயரும் அவரைப்பார்த்து, மகிழ்ச்சியுற்று மிக்கவாத$_3$ரத்துடன் பெருமாளை மங்க$_3$ளாஶாஸநம் பண்ணஅழைத்துச்சென்றார். அழகரும் அந்த ஸேநைமுதலியாரிடம்

'ஜிஹ்வாக்$_3$ரே தவ வக்ஷ்யாமி ஸ்த்தி$_2$த்வா வத$_3$ ஸூபாவநம்।
பத்$_3$யம் த்வத$_3$ார்யவிஷயம் முநேரஸ்ய மமாஜ்ஞயா ॥

(உமது நாவின் நுனியிலிருந்துகொண்டு நான் சொல்லும் உமதாசார்ய விஷயமான பரமபாவநமான ஶ்லோகத்தை இந்த ஜீயருக்குச் சொல்லும்) என்று அர்ச்சகமுகே$_2$ந நியமிக்க, ஸேநைமுதலியாரும்

'த$_4$ந்யோஸ்மீதி ச ஸேநேஶதே$_3$ஶிகோSவத$_3$த ஸ்வயம்।
வஹந் ஶிரஸி தே$_3$வஸ்ய பாதெ$_3$ள பரமபாவநௌ ॥

(ஸேனைமுதலியார் அழகருடைய பரமபாவநமான ஸ்ரீஶட$_2$கோபனைத் திருமுடியில் த$_4$ரித்துக்கொண்டு த$_4$ந்யனுனேன் என்று சொல்லி, தாமே

visit us at www.srivaishnavan.com

அந்தத்தனியனைச் சொன்னூர்) என்கிறபடியே அர்ச்சகர் ஸ்ரீப$_2$ட்டகோபனே ஸாதிக்கும்போது 'ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம்' என்று தொடங்கும் தனியனைக் கூறினூர்.

பின்பு ஸேனைமுதலியாருக்கும், அர்ச்சகருக்கும் இந்த ஶ்லோகம் தெரியாமற்போயிற்று. யதிராஜஜீயர் மடத்திற்குச் சென்று ஸேனைமுதலி யார் அந்தஶ்லோகத்தை அருளிச்செய்யவேண்டும் என்று கேட்டார். அதற்கு ஜீயர் 'அருளிச்செய்த தேவரீரே கேட்கவேணுமோ?' என்ன, 'எனக்கு எதுவும் தெரியவில்லை. இதை, ஸௌந்த$_3$ரகி$_3$ரி ஸௌந்த$_3$ரபா$_3$ஹு ஸௌந்த$_3$ரஜாமாத்ருமுனி விஷயமாய் அருளிச்செய்துள்ளார்' என்றூர். அதுமுதல் அம்மூவரும் அத்தனியனையே தங்களுக்குத் தஞ்சமாகக் கொண்டார்கள்.

**திருவேங்கடமுடையான் வெளியிட்ட வித$_4$ம்**

மணவாளமாமுனிகளின் காலத்திலே மோக்ஷமடையவேண்டும் என்று விருப்பத்தோடு தி$_3$வ்யதே$_3$ஶயாத்ரை செய்துகொண்டு திரிந்தார் ஒருவர். ஒருஸமயம் அவருடைய கனவிலே தோன்றித் திருவேங்கட முடையான் ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரத் தனியனைச் சொல்லி 'இதையே உய்வுபாயமாகக்கொள்' என்று உபதே$_3$ஶித்தார். அதனையே தமக்குத் தஞ்சமாகக் கொண்டிருந்த அவர் அவ்வருடம் புரட்டாசி ப்$_3$ரஹ்மோத்ஸவம் ஸேவிக்கத் திருவேங்கடத்திற்குச் சென்றூர். திருவேங்கடமுடையான் அவருக்கு அருள்புரிந்து, அர்ச்சகமுகே$_2$ந கையைப்பிடித்துக்கொண்டு வந்து திருவோலக்கத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவேவிட்டு 'அவர்கள் அருளிச்செயல் கோ$_3$ஷ்டியைத் தொடங்க உள்ளனர். அதனைக் கேளும்' என்றூர். பெரியகேள்விஜீயர் 'ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம்' என்று தொடங்கினூர். அதைக்கேட்டவுடன் வியப்படைந்த இவர் தண்டனிட்டு ஜீயரிடம் 'ஒருவிண்ணப்பம் கேட்டருளவேண்டும்' என்றூர். அர்ச்சகரும் பெரியகேள்விஜீயரிடம் 'இவன் பணிப்பதைக் கேளுங்கோள்' என்றூர். 'அடியேனுக்குத் திருவேங்கடமுடையான் கனவில் உபதே$_3$ஶித்த ஶ்லோகத்தை தேவரீர் அறிந்தது எப்படி' என்றூர் அவர். அதுகேட்ட ஜீயர் 'அப்படியானூல் ஶ்லோகத்தைச் சொல்லிக்காட்டும்' என்ன, அவரும் ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரத் தனியனை விண்ணப்பித்து, இதையே தாம் தஞ்சமாகக் கொண்டுள்ளதாகக் கூறினூர். அங்கிருந்த ஜீயர் முதலானவர்கள் தங்களுக்கு இத்தனியன் வந்தவிதத்தைக் கூறினூர்கள். பின்பு திருவேங்கடமுடையான்

'உபதி$_3$ஷ்டம் மயா ஸ்வப்நே தி$_3$வ்யம் பத்$_3$யமித$_3$ம் ஶுப$_4$ம் ।
வரயோகி$_3$நமாஶ்ரித்ய ப$_4$வத: ஸ்யாத் பரம் பத$_3$ம் ।
இத்யுக்த்வா தம் வ்ருஷாத்$_3$ரீஶ: ஸ்ரீபத$_3$ாத்$_3$ரேணுமேவ ச ।
த$_3$த்த்வாऽऽஶு ப்ரேஷயாமாஸ க$_3$ச்ச$_2$ யோகி$_3$வரம் ஶுசிம் ॥



visit us at www.srivaishnavan.com

(மிகச்சிறந்ததும், மங்க$_3$ளரகரமானதுமான இந்த ஶ்லோகம் என்னாலே உனக்குக் கனவில் உபதே$_3$ஶிக்கப்பட்டது. 'நீ பெரியஜீயரைப் பற்றினால் பரமபத$_3$ப்ராப்தியைப் பெறுவாய்' என்று சொல்லி, திருவேங்கடமுடையான் ஸ்ரீபாதரேணுவையும் தந்து 'யதிஶ்ரேஷ்ட$_2$ரான மாமுனிகளிடம் செல்வாயாக' என்று கூறி விரைவாக அனுப்பினார்) என்கிறபடியே ஸ்ரீஶட$_2$கோபனையும் அடிப்பொடியும் தந்து திருவரங்கத்திற்கு தீர்த்த$_2$யாத்ராப்ரியரான ப்$_3$ராஹ்மணரை அனுப்பினார். அவரும் விரைவாக திருவரங்கத்தை வந்தடைந்து, பெரியஜீயர் பாத$_3$ங்களில் வேரற்றமரம் போலே விழுந்தார். பரமகாருணிகரான ஜீயர் 'நீ யார்? வந்தகாரியமேது?' என்று கேட்க, 'அடியேன் முமுக்ஷுவாய், தீர்த்தயாத்ராபரனாய்த் திரிவானொருத்தன்' என்று தொடங்கி ஸ்வப்நவ்ருத்தாந்தத்தையும், திருவேங்கடமுடையான் விஶேஷகடாக்ஷம் செய்தருளி அனுப்பியதையும் கூறினார்.

ஜீயரும் 'திருமலையப்பன் திருவருளுக்கு இலக்கானவனோ நீ' என்று மிகவும் உகந்து, 'உனக்கென்ன வேண்டும்' என்றார். 'மோக்ஷத்தை அடைவதற்கு மந்த்ரரூபமான தனியனையும், அம்மந்திரத்தை உபதே$_3$ஶித்த ஆசார்யனை திருமலையப்பனையும், அம்மந்திரத்தால் சொல்லப்படும் தெய்வமான தேவரீர் திருவடிகளையும் உறுதியாகப்பற்றி முக்தனானேன். இனிவேண்டுவதுண்டோ' என்று கூறினார். ஜீயரும்

மந்த்ரே தத்தே$_3$வதாயாஞ்ச தத$_2$ா மந்த்ரப்ரதே$_3$ கு$_3$ரௌ ।
த்ரிஷு ப$_4$க்திஸ் ஸதா$_3$ா கார்யா ஸா ஹி ப்ரத$_2$மஸாத$_4$நம் ॥

(மந்த்ரத்திலும், மந்த்ரத்தின் பொருளான தெய்வத்தினிடமும், மந்த்ரப்ரத$_3$னான ஆசார்யனிடத்திலும் எப்போதும் ப$_4$க்தி செய்யப்பட வேண்டும். இதுவே ப$_4$க$_3$வானை அடைவதற்கு முக்$_2$யமானவழி) என்னுமது இவருக்கு உண்டாயிருக்கிறதே. அதி$_4$காரிபூர்த்திக்கும் வேண்டுவது இதுவேயன்றோ என்று உகந்து அவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து 'திருவேங்கடராமானுஜதா$_3$ஸர்' என்று தா$_3$ஸ்யநாமமிட்டருளினார். பிறகு ஸந்நிதி$_4$க்குச் சென்றபோது பெருமாளும் 'வாரீர், திருவேங்கடராமானுஜதா$_3$ஸரே! உமக்கு மேல்வீடு தந்தோம்' என்று ஸ்ரீஶட$_2$கோபனை ஸாதிக்க அன்றே அவர் திருநாட்டுக்கெழுந்தருளினார். பெரியோர்களுக்குச் செய்யும் முறையில் எல்லாரும், அவருக்குச் செய்யவேண்டிய க்ரியைகளைச் செய்துமுடித்துப் பெரியஜீயரின் ப்ரப$_4$ாவத்தைக் கொண்டாடிக்கொண்டு இருந்தனர்.

**உபஸம்ஹாரம்**

இங்ஙனம் நம்பெருமாளும், ப$_3$த$_3$ரிநாராயணனும், அழகரும், திருவேங்கடமுடையானும் இத்தனியனுக்கு ப்ரவர்த்தகர்களாவார்கள்.

visit us at www.srivaishnavan.com

பட்டர்பிரான் முதலாய பதின்மர்கலைப் பழிச்சலிலும்
சிட்டர்களாய்த் தினந்தோறும் திருமணிடுவேளையிலும்
இட்டமுற உணும்பொழுதத்து ஒண்கரநீர் ஏற்கையிலும்
அட்டதிக்கும் விளங்குரைத்தார் ஆரியர்கள் அனைவருமே.

(ஸ்ரீசைலவைபவம் 3)என்கிறபடியே அரங்கன் அழகியமணவாள மாமுனிகளுக்குத் தனியன் ஸமர்ப்பித்தவன்று தொடங்கி ஆசார்யர்கள் அனைவரும் பெரியாழ்வார் முதலான ஆழ்வார்கள் பதின்மரின் அருளிச்செயல் அநுஸந்த$_4$ானத்திற்கு முன்பும், திருமண்காப்பு இட்டுக் கொள்ளும்போதும், உண்பதற்குமுன் பரிஷேசநம் பண்ணும்போதும், 'ஸ்ரீஶைலேஶதயாபாத்ர'த் தனியனை ஓதிவருகிறார்கள்.

பரவஸ்துப$_4$ட்டர்பிரான்ஜீயர் த்$_3$வயத்திலும் ஶட$_2$கோபத்$_3$வயம் அதிசயிதமாய், அதுதன்னிலும் ராமாநுஜத்$_3$வயம் அதிசயிதமாய், அதுதன்னிலும் தந்நிஷ்ட$_2$ரான நம்ஜீயரைத்தொழுவதாயிருக்கிற இந்தத் தனியனே ஶ்ரேஷ்ட$_2$மென்று அருளிச்செய்தார். 'மணமுடைய மந்திரமா மதிக்கொள்ளீர் தனியனையே' (ஸ்ரீசைலவைபவம்) என்கிறபடியே இதனை மந்த்ரமாகவே போற்றினர் முன்னோர்.

ப்ரத$_2$மாசார்யரான பெரியபெருமாளாலே பற்றப்பட்ட பெருமைபடைத்த பெரியஜீயரின் ப்ரப$_4$ாவத்தைப்பற்றி பத்தியில்லாத பாவியாகியவடியேன் பேசப்புகுந்தது பரிஹஸிக்கத்தக்கதே. மாமுனிகளைப்பற்றிப் பேசுவதென்றால் தேவராஜகு$_3$ருவாகிய எறும்பியப்பா தான் பேசவேண்டும்.

ஶட$_2$ரிபுரேக ஏவ கமலாபதி தி$_3$வ்யகவி:
மது$_4$ரகவிர் யத$_2$ா ச ஶட$_2$ஜிந்முநிமுக்$_2$யகவி: ।
யதிகுலபுங்க$_3$வஸ்ய பு$_4$வி ரங்க$_3$ஸுத$_4$ாகவிராட்
வரவரயோகி$_3$நோ வரத$_3$ராஜகவிஶ்ச தத$_2$ா ॥

'கண்ணன் தனக்கு ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்' என்றும், 'தேவிற்சிறந்த திருமாற்குத் தக்க தெய்வகவிஞன் பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே' (சடகோபரந்தாதி) என்றும் சொல்லுகிற படியே நம்பெருமாளுக்கு ஏற்றகவி நம்மாழ்வாரே. நம்மாழ்வாரைப் பாடத் தகுந்த புலவர் மதுரகவிகளே. எதிராசருக்கு ஏற்ற கவிஞர் திருவரங்கத்த முதனாரே. அதுபோலே மணவாளமாமுனிகளைப் பாடவல்ல புலவர் எறும்பியப்பாவேயாவார்.

எத்தகுதியுமில்லாமற்போனாலும், மாமுனிகளின் மஹிமையைக் கூறும் ஸ்ரீஶைலேஶதயாபாத்ரத் தனியனின் அவதாரக்ரமத்தை, ஸ்வஸத்தையுண்டாம்படி ஆசைபற்றி அறையலுற்றேன். (கம்பராமாயணம்). பெரியோர்கள் பொறுத்தருள்வாராக.

**மாமுனிவன் மலரடி வாழ்க.**

**பொன்னடியாம் செங்கமலத்திற்குப் பல்லாண்டு.**

visit us at www.srivaishnavan.com

4. அவ.–அநந்தரம் எம்பெருமானாருக்காசார்யரான பெரியநம்பிகளை மநஸாவநுஸந்தி4த்து அவருக்காசார்யராய், ஆமுதல்வனென்று எம்பெருமானாரைக் கடாக்ஷித்த ஆளவந்தார்விஷயமாக, ஸ்வதஃப்ரமாண மான வேத3த்தில் ப்ரதிபாதி3த்த தத்த்வாசாரரூபமான மார்க்க3த்தை குதஃ?குதஃ? வென்று கேட்டுக்கொண்டு ஹேதுமாத்ரஶரணரான பா3ஹ்யகுத்3ருஷ்டிகளாகிற முள்ளில்லாமல் ஸித்3தி4த்ரயாதி3களான ஸ்வப்ரப3ந்த4ங்களாலே செய்து, அதில் ஜ்ஞாநாதி3பூர்ணனை எம்பெருமான்விஷயமான ப4க்தியை நடத்தாநின்ற ஆளவந்தாரை மநநம் பண்ணக்கடவோம் என்கிறார்.

४. विधाय वैदिकं मार्गमकौतस्कुतकण्टकम्।
नेतारं भगवद्भक्तेर्यामुनं मनवामहै।।

4. வித4ாய வைதி3கம் மார்க்க3ம் அகௌதஸ்குதகண்டகம்।
நேதாரம் ப4க3வத்3ப4க்தேர் யாமுநம் மநவாமஹை।।

வ்யா.– वेदे भवं वैदिकम् (வேதே3 ப4வம் வைதி3கம்) मार्गम् (மார்க3ம்) வழியை, कुत: कुत: पृच्छन्ति, ते एव कण्टका: न विद्यन्ते यस्मिन्, तम् (குதஃ குதஃ ப்ருச்ச2ந்தி, தே ஏவ கண்டகாஃ ந வித்3யந்தே யஸ்மிந், தம்) கேவல தார்க்கிகராகிற முள்ளில்லாததாக, विधाय (வித4ாய)–பண்ணி, भगवति भक्ति: तस्या:(ப4க3வதி ப4க்திஃ தஸ்யாஃ)எம்பெருமான்விஷயமான ப்ரீதிரூபாபந்ந ஜ்ஞாநத்தை (கர்மணிஷஷ்டீ2). नेतारम् (நேதாரம்)–ப்ராபியாநின்ற, यमुनायां भव: यामुन:, तम् (யமுநாயாம் ப4வஃ யாமுநஃ, தம்)யமுனைத்துறைவனை ஸ்ரீஆளவந்தாரை, मनवामहै (மநவாமஹை) –கு3ணவத்தாநுஸந்த4ாநம் பண்ணக்கடவோம். मन-अवबोधने लोट् उत्तमबहुवचनम्(மந–அவபோ3த4நே லோட் உத்தம–ப3ஹுவசநம்)–கு3ணநுப4வத்தாலாதல், தமக்குப் பிறந்த நாநாப4ாவத்தாலாதல் ஸ்வகீயரையுங் கூட்டிக்கொண்டாதல் ப3ஹுவசநம்.(4)

5. அவ.–இதில் ஸ்ரீஆளவந்தாருக்கு ஆசார்யரான மணக்கால் நம்பியையும், ப்ராசார்யரான உய்யக்கொண்டாரையும் மாநஸமாக அநுஸந்தி4த்து, அவருக்கும் "भूयो नम:" (பூ4யோ நமஃ), "पितामहं नाथमुनिं विलोक्य" (பிதாமஹம் நாத2முநிம் விலோக்ய) என்னும்படி பரமோத்3தே3ஶ்யரான நாத2முனிகள்விஷயமாக, ஸாம்ஸாரிகதாபஶாந்திகரமான ப4க3வத்ப4க்தி பிறக்கைக்கு ப்ரதிப3ந்த4கங்கள் மேலிட்டகாலத்தில் ஆழ்வாருடைய நிர்ஹேதுகக்ருபையாலே லபி4த்த ஸ்ரீஸூக்த்யாதி3 முக2மாக ஶப்3த3ாதி3விஷயப்ராவண்யத்தைத் தவிர்த்து, ப4க3வஜ்ஜ்ஞாந ப4க்திகளை கு3ணகு3ணநிரூபணம்பண்ணாதே ப்ரத்யுபகாரநிரபேக்ஷமாக உபகரித்து, அத்தால் ப்ரபந்நகுலத்துக்கு நாத2ராய், ப4க3வத்3கு3ணநுஸந்த4ாந



visit us at www.srivaishnavan.com

ஶீலரான நாத$_2$முனிகளென்று ப்ரஸித்$_3$த$_4$மான ஒரு மேக$_4$த்தை நிரந்தரம் ஸ்துதித்து வாய்படைத்த ப்ரயோஜநம் பெறுகிறேன் என்கிறுர்.

५. नौमि नाथमुनिं नाम जीमूतं भक्त्यवग्रहे।
वैराग्यभगवत्तत्त्वज्ञानभक्त्यभिवर्षुकम् ।।

5. நௌமி நாத$_2$முநிம் நாம ஜீமூதம் ப$_4$க்த்யவக்$_3$ரஹே|
வைராக்$_3$யப$_4$க$_3$வத்தத்த்வஜ்ஞாநப$_4$க்த்யபி$_4$வர்ஷுகம்||

வ்யா. – भक्तेः अवग्रहः तस्मिन्(ப$_4$க்தே: அவக்$_3$ரஹ: தஸ்மிந்) ப$_4$க்தியாகிற தீர்த்த$_2$த்தினுடைய வர்ஷமில்லாத காலத்தில்,''वग्रहावग्रहौ समौ'' (வக்$_3$ரஹாவக்$_3$ரஹௌ ஸமௌ)என்று கோஶம். विगतः रागः यस्य, तस्य भावः तत् तत्त्वस्य ज्ञानञ्च भक्तिश्च ते, वैराग्यञ्च भगवति तत्त्वज्ञानभक्ती च ताः, तासाम् अभितः वर्षुकः. तम् (விக$_3$த: ராக$_3$: யஸ்ய, தஸ்ய ப$_4$ாவ: தத், தத்த்வஸ்ய ஜ்ஞாநஞ்ச ப$_4$க்திஶ்ச தே வைராக்$_3$யஞ்ச ப$_4$க$_3$வதி தத்த்வஜ்ஞாநப$_4$க்தீ ச தா:, தாஸாம் அபி$_4$த: வர்ஷுக: தம்) ப$_4$க$_3$வத்வ்யதிரிக்தவிஷயத்தில் வைராக்$_3$யமென்ன, ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் ஶேஷித்வாதி$_3$யாத$_2$ாத்ம்ய ஜ்ஞாநமென்ன, தத்$_3$விஷயப$_4$க்தியென்ன, இதுகளை, ஸம்ருத்$_3$த$_4$மாக வர்ஷியாநின்றுள்ள, नाथश्चासौ मुनिश्च, तन्नाम (நாத$_2$ஶ்சாஸௌ முநிஶ்ச, தந்நாம) நாத$_2$முனியென்று ப்ரஸித்$_3$த$_4$மான, जीमूतम् (ஜீமூதம்)–மேக$_4$த்தை, नौमि (நௌமி)–ஸ்தோத்ரம் பண்ணுகிறேன். नु स्तुतौ इति धातोः लट् उत्तमैकवचनम् (''நு ஸ்துதௌ'' இதி த$_4$ாதோ: லட்–உத்தமைகவசநம்)5.

6. அவ.–அநந்தரம், இதுகொண்டு ஸூத்ரவாக்யார்த்த$_2$ம் ஒருங்கவிடுவர் என்னும்படி உடையவருக்கு ஸ்ரீப$_4$ாஷ்யநிர்மாணோபகாரகராய், மாதாபிதேத்யாதி$_3$ப்படியே, ப்ரபந்நகுலத்திற்கு முதலடியாய், नाथाद्रावभ्यषिञ्चत् (நாத$_2$ாத்$_3$ராவப்$_4$யஷிஞ்சத்) என்று நாத$_2$முநிகளுக்கு ஸகலார்த்தோ$_2$பதே$_3$ஷ்டாவாய், அவ்வழியாலே தமக்குப் பரமோத்$_3$தே$_3$ஶ்யரான நம்மாழ்வார்விஷயமாக, ப$_4$க$_3$வத்ப்ராப்தியில் தமக்குண்டான அத்யாத$_3$ரமும், எம்பெருமானுக்கு ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்திலுண்டான அத்யாத$_3$ரமும், ஒருவடிவுகொண்டாப்போலே அவதரித்து, மயர்வறமதிநலமருளினன் (திருவாய்.1–1–1) என்னும்படி ப$_4$க$_3$வந்நிர்ஹேதுகக்ருபையாலே த்$_3$ரமிட$_3$ப$_4$ாஷாரூபையாய், ப்$_3$ரஹ்மப்ரதிபாதி$_3$கையாய், ஆயிரம் பாசுரரூபையுமான உபநிஷத்தை முந்துறமுன்னம் ஸாக்ஷாத்கரித்து அத்தாலே ருஷிஶப்$_3$த$_3$வாச்யரான நம்மாழ்வாரை ப்ரீதியோடு ஸேவிக்கிறோமென்கிறுர்.

६. ऋषिं जुषामहे कृष्णतृष्णातत्त्वमिवोदितम्।
सहस्रशाखां योऽद्राक्षीद्द्राविडीम् ब्रह्मसंहिताम्।।



visit us at www.srivaishnavan.com

6. ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வமிவோதி₃தம்।
ஸஹஸ்ரஶாக₂ாம் யோऽத்₃ராக்ஷீத் த்₃ராவிடீ₃ம் ப்₃ரஹ்மஸம்ஹிதாம்॥

வ்யா.–यः (யஃ) யாதொருத்தர், द्रमिडभाषायां भवा, ताम् (த்₃ரமிட₃பா₄ஷாயாம் ப₄வா, தாம்) த்₃ரமிட₃பா₄ஷையாக ப்ரகாஶித்த, सहस्रं शाखाः यस्याः, ताम् (ஸஹஸ்ரம் ஶாக₂ாஃ யஸ்யாஃ, தாம்) ஆயிரம் பாசுரங்களையுடைத்தான, ब्रह्मणः संहिता, ताम् (ப்₃ரஹ்மணஃ ஸம்ஹிதா, தாம்)–ப்₃ரஹ்மவிஷயையான உபநிஷத்தை, अद्राक्षीत् (அத்₃ராக்ஷீத்)–ஸாக்ஷாத்கரித்தாரோ, उदितम् (உதி₃தம்)–இந்த ஜக₃த்திலவதரித்த, कृष्णे तृष्णा, तस्य तृष्णा वा, तस्याः तत्त्वमिव (க்ருஷ்ணே த்ருஷ்ணா, தஸ்ய த்ருஷ்ணா வா, தஸ்யாஃ தத்த்வமிவ)–कृषिर्भूवाचकः शब्दो णश्च निर्वृतिवाचकः (க்ருஷிர் பூ₄வாசகஃ ஶப்₃தோ₃ ணஶ்ச நிர்வ்ருதிவாசக:)என்று ஸர்வாநந்த₃ஹேது வாய், ஸுலப₄ரான எம்பெருமான்விஷயத்தில் தமக்குண்டான ஆசையுடையவும், எம்பெருமானுடைய ஆசையுடையவும் ஸ்வரூபம் போலிருக்கிற,ऋषिम् (ருஷிம்)–நம்மாழ்வாரை, जुषामहे (ஜுஷாமஹே)–ஸேவிக்கிறோம். जुषि प्रीतिसेवनयोः (ஜுஷி ப்ரீதிஸேவநயோஃ). अद्राक्षीत् (அத்₃ராக்ஷீத்)என்கையாலும், ऋषिम् (ருஷிம்) என்கையாலும் திருவாய்மொழிக்கு ப்ரவாஹதோ நித்யத்வம் ஸூசிப்பிக்கப்பட்டது.6.

7. அவ.–அநந்தரம், கு₃ருபரம்பரையில் அவஶ்யாநுஸந்தே₄யரான ஸ்ரீஸேனைமுதலியாரை மாநஸமாக அநுஸந்தி₄த்து, அவர்முக₂மாக ஆழ்வாருக்கு த்₃வயோபதே₃ஶத்தாலே ஆசார்யகோடிப்ரவிஷ்டையான பெரியபிராட்டியார்விஷயமாக, சேதநாசேதநாத்மகமான இந்த ஜக₃த்தினுடைய நியாம்யநியாமகபா₄வரூபதாரதம்யமாகிற மேடுபள்ளம், தன்புருவம் நெறித்தவிடத்திலேயாம்படியான பெருமையையுடைய ளாய், देवदेवस्य दिव्यमहिषीं (தே₃வதே₃வஸ்ய தி₃வ்யமஹிஷீம்) என்கிற படியே பெரியபெருமாளுக்கு வல்லபை₄யான பெரியபிராட்டியாருக்கு என்னை எழுதிக்கொடுக்கிறேன் என்கிறார்.

௭. नमः श्रीरङ्गनायक्यै यद्भ्रूविभ्रमभेदतः ।
ईशेशितव्यवैषम्यनिम्नोन्नतमिदं जगत् ॥

7. நமஃ ஸ்ரீரங்க₃நாயக்யை யத்₃ப்₄ரூவிப்₄ரமபே₄த₃த:।
ஈஶேஶிதவ்யவைஷம்யநிம்நோந்நதமித₃ம் ஜக₃த்॥

வ்யா.–इदम् (இத₃ம்)–ப்ரத்யக்ஷஶாஸ்த்ரஸித்₃த₄மான,जगत् (ஜக₃த்)–ப்ரபஞ்சமானது,यस्याः भ्रुवोः विभ्रमः, तस्य भेदात् (யஸ்யாஃ ப்₄ருவோஃ விப்₄ரமஃ தஸ்ய பே₄த₃ாத்) அஸ்யேஶாநேத்யாதி₃ ஶ்ருதிப்ரஸித்₃தை₄யான யாதொரு பிராட்டியினுடைய புருவங்களுடைய வ்யாபாரவிஶேஷத்தால்,



visit us at www.srivaishnavan.com

ईशश्च ईशितव्यश्च, तयोः विषमस्य भावः, तेन निम्नञ्च उन्नतञ्च तत् (ஈஶஶ்ச ஈஶிதவ்யஶ்ச, தயோ: விஷமஸ்ய பா₄வ:, தேந நிம்நஞ்ச உந்நதஞ்ச தத்) நியாமகமாயும், நியாம்யமாயும் ஆகுகையாகிற தாரதம்யத்தாலே மேடுபள்ளமாகிறது. श्रीरङ्गस्य नायकः, तस्य पत्नी तस्यै (ஸ்ரீரங்க₃ஸ்ய நாயக:, தஸ்ய பத்நீ, தஸ்யை) கோயிலுக்கு நிர்வாஹகரான பெரியபெருமாளுக்கு வல்லபை₄யான பெரியபிராட்டியார்பொருட்டு, नमः(நம:)–நமஸ்காரம்.7.

8. அவ.– அநந்தரம், ப்ரத₂மாசார்யரான பெரியபெருமாள் விஷயமான ஐந்து ஶ்லோகத்தில் முதல் ஶ்லோகத்தாலே தாம் இப்ரப₃ந்த₄த்தில் அருளிச் செய்யப்போகிற த்₃வயார்த்த₂த்தை ஸங்க்₃ரஹிக்கத் திருவுள்ளமாய், ''மலராள் தனத்துள்ளான்'' (முன்றும் திருவ.3) என்கிறபடியே பெரியபிராட்டியாருடைய திருமுலைத்தடங்களுக்கு ஓராப₄ரணமென்னும் படியாய், கோயிலிலே திருவநந்தாழ்வான்மடியிலே மிகவும் விளங்கா நின்று கொண்டு ஸர்வாபீ₄ஷ்டப்ரத₃மாய், வைத்தகண்வாங்காதே இருக்கும்படியான அழகையுடைய ஒரு சிந்தாமணியென்னலாம் படியாய், ஹேயப்ரதிப₄டதையாலே நிரவதி₄கதேஜோரூபரான பெரியபெருமாளை உபாயோபேயமாகப் பற்றுகிறேன் என்கிறார்.

८. श्रीस्तनाभरणं तेजः श्रीरङ्गेशयमाश्रये।
चिन्तामणिमिवोद्वान्तम् उत्सङ्गेऽनन्तभोगिनः।।

8. ஸ்ரீஸ்தநாப₄ரணம் தேஜ: ஸ்ரீரங்கே₃ஶயமாஶ்ரயே।
சிந்தாமணிமிவோத்₃வாந்தமுத்ஸங்கே₃ऽநந்தபே₄ாகி₃ந:।।

வ்யா.– श्रियः स्तनयोराभरणम् (ஶ்ரிய: ஸ்தநயோராப₄ரணம்) श्रीयते श्रयते (ஸ்ரீயதே, ஶ்ரயதே)–என்று எல்லாருக்கும் தன்னைப்பற்றி ஸ்வரூப லாப₄மாய், தனக்குமவனைப்பற்றி ஸ்வரூபலாப₄மாம்படியான பெரியபிராட்டியாருடைய திருமுலைத்தடத்திற்குஅலங்காரமாய், अनन्तश्चासौ, भोगी च, तस्य (அநந்தஶ்சாஸௌ போ₄கீ₃ ச, தஸ்ய) திருவநந்தாழ்வானுகிற ஸர்ப்பத்தினுடைய, उत्सङ्गे (உத்ஸங்கே₃)– திருமடியிலே, उत्भान्तम्(உத்ப₄ாந்தம்)–நன்றாக விளங்காநின்றுள்ள, उद्वान्तम् (உத்₃வாந்தம்) என்று பாட₂மானபோது கக்கப்பட்டதென்றபடி. चिन्तामणिमिव (சிந்தாமணிமிவ) மநோரதி₂த்தார் மநோரத₂மடையத்தரவற்றான சிந்தாமணிபோலிருக்கிற, श्रीरङ्गे शयः तम् (ஸ்ரீரங்கே₃ ஶய: தம்)– ஸப்தம்யலுக்ஸமாஸம். ஸர்வஸம்பத்ஸம்ருத்₃த₄மான கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற, तेजः (தேஜ:) नारायणपरोज्योतिः (நாராயணபரோ ஜ்யோதி:) என்று நிரவதி₄கதேஜோரூபரானபெரியபெருமாளை, आश्रये (ஆஶ்ரயே) பற்றுகிறேன். 8.

visit us at www.srivaishnavan.com

நிறைந்த வயலாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே நித்யவாஸம் பண்ணுகிற. ''திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி'' என்று தொடங்கி, ''மன்னு நாரணன் நம்பி'' என்று நிக$_3$மிக்கையாலே ஸாத$_4$ாரணாஸாத$_4$ாரணவ்யாவ்ருத்தமான வாக்யத்$_3$வயகு$_3$ண பூர்த்தியை, ''மன்னுநாரணன்நம்பி'' என்று அருளிச்செய்கிறார். (பிறந்தமை) பிறந்தப்ரகாரத்தையென்றது—முற்பட்ட பிறப்பை ஒளித்துத் தாம் தொடங்கின திருவாய்ப்பாடியில் பிறப்பை, கம்ஸநக$_3$ரியில் நின்றும் போரப்பெறுகையாலே மறுபிறப்பாக நிக$_3$மிக்கிறார். ''புநர்ஜாதம்''(ரா.பா.77–5 )என்னக்கடவதிறே.

(மின்னித்யாதி$_3$) ப$_4$ட்டர்பிரானாகையாலே ''மின்னுநூல்'' என்கிறாராதல், ''வேதப்பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன்'' (பெரியாழ் திரு.2–8–10) என்று இவருடைய விஷ்ணுஶப்$_3$த$_3$மும் அஸாத$_4$ாரணமாக ஸகல ஶாஸ்த்ரங்களாலும் ப்ரகாஶிக்கையாலே மின்னுநூலென்கிறாராதல். ''விட்டுசித்தன்'' என்று—விஷ்ணுவைத் திருவுள்ளத்திலேயுடையவராகையாலே மற்றொன்றறியாதவர். ''விரித்த'' என்கையாலே ஸகலஶாஸ்த்ரங்களையும் மங்க$_3$ளாஶாஸநபர்யந்தமாக விரித்தருளிச் செய்தாரென்கிறது. இம்மங்க$_3$ளாஶாஸநதாரதம்யம் பலர்க்கும் உண்டாகையாலே ''இப்பன்னுபாடல்'' என்று வ்யாவர்த்திக்கிறது. ''வல்லார்க்கு'' என்றது—ஸாபி$_4$ப்ராயமாக வல்லார்க்கென்றபடி. அதாவது –இவ்வபி$_4$மாநத்திலே ஒதுங்கினார்க்கும் இப்பிள்ளையுடைய

**விக்$_3$ரஹவிஶிஷ்டனாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற, நாராயண ஶப்$_3$த$_3$வாச்யனாய், கல்யாணகு$_3$ணபரிபூர்ணனானவன் திருவவதரித்த ப்ரகாரத்தை. (மின்னுநூல் விட்டுசித்தன் விரித்த) ப$_4$ட்டர்பிரானாகையாலே விளங்காநின்றுள்ள திருயஜ்ஞோபவீதத்தையுடையராய், ஸர்வவ்யாபகனான ஸர்வேஶ்வரனைத் தம்திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கையாலே விஷ்ணுசித்தரென்னும் திருநாமத்தையுடையரான பெரியாழ்வார், திருவவதரித்தகாலத்தில் உபலாலநாதி$_3$களோடேகூட விஸ்தரேண அருளிச்செய்த. (இப்பன்னுபாடல் வல்லார்க்கில்லை பாவமே) ரஸ்யதையாலே விஶேஷஜ்ஞரானவர்கள் எப்போதுமிருந்துசொல்லும்படியான இப்பாடலை ஸாபி$_4$ப்ராயமாக வல்லவர்களுக்கு ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வவிரோதி$_4$யான பாபமில்லை.(10)**

**பெரியஜீயர்திருவடிகளே ஶரணம்.**

*அரு.–பத்தாம்பாட்டு. (செந்நெல்) சிவந்தநெல். திருப்பாற்கடலில் நின்றும் திருக்கோட்டியூரில் எழுந்தருளுகையாலே (அஸாத$_4$ாரணவிக்$_3$ரஹ விஶிஷ்டனாய்) என்றது.''பன்னுதல்'' ஆராய்தலாய், அத்தால் ப$_2$லிதார்த்த$_2$த்தை யருளிச்செய்கிறார் (ரஸ்யதை யித்யாதி$_3$). சொல்லுவார்க்கென்னாதே ''வல்லார்க்கு'' என்றத்தால் ப$_2$லிதம் (ஸாபி$_4$ப்ராயமாக) என்றது. பிறந்தமையை ''விரித்த'' என்றத்தோடந்வயிப்பது. (10)*



visit us at www.srivaishnavan.com

ஸ்தி$_2$திக$_3$மநஶயநாதி$_3$களாலே இவரைப்போலே வயிறுமறுக வேண்டும் பாபமுமில்லையென்கிறது.

பிள்ளைதிருவடிகளே ஶரணம்.

**ஸ்வா.– சீதக்கடல் ப்ரவேஶம்.** கீழ்த்திருமொழியிலே "திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்" என்று தொடங்கி, "திருக்கோட்டியூர் மன்னுநாரணன் நம்பிபிறந்தமை" என்று அவதாரவ்யாபாரத்தையெல்லாம் அநுப$_4$வபூர்வகமாக வருளிச்செய்தார். இனிமேல் திருவடிகளில்நின்றும் திருமுடியளவாக அநுப$_4$வித்து அநுப$_4$வித்த ப்ரகாரத்தை யஶோதைப்பிராட்டி பாசுரத்தாலே விருப்பம்தோற்றவருளிச் செய்கிறார்.

**ஸ்வா.–முதற்பாட்டு.**(*சீதமித்யாதி$_3$*) அக$_3$ாத$_4$மாகையாலே குளிர்ச்சி மாறுதிருக்கிற ஸமுத்$_3$ரத்தில். "கடலுள்ளமுது" என்கையாலே புறவமுதுதோன்றிற்றிறே. *விண்ணவரமுதுணவமுதில் வரும்

**முதற்பத்து–இரண்டாந்திருமொழி–சீதக்கடல் ப்ரவேஶம்.**

**வ்யா.**–கீழில்திருமொழியிலே, "திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்"(பெரியாழ் திரு 1–1–1) என்று தொடங்கி, "திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை" (பெரியாழ் திரு 1–1–10) என்று தலைக்கட்டுகையாலே திருவவதரித்தருளின ப்ரகாரத்தை, தத்காலோபலாலநங்களோடே அநுப$_4$வித்து ஹ்ருஷ்டராயருளிச்செய்தார்; இனிமேல், இப்படி திருவவதரித்தருளினவனுடைய தி$_3$வ்யவிக்$_3$ரஹவைலக்ஷண்யத்தை தத்காலத்தில் யஶோதைப்பிராட்டி அநுப$_4$வித்தாப்போலே தத்$_3$ப$_4$ாவயுக்தராய்க்கொண்டு திருவடிகளில்நின்றும் திருமுடியளவாக அநுப$_4$வித்து, அநுப$_4$வித்த ப்ரகாரத்தை, அப்போது அவள்பேசின பாசுரத்தாலே ஆத$_3$ரம் தோற்ற அருளிச்செய்கிறார்.

**சீதக்கடல் உள்ளமுதன்னதேவகி**
**கோதைக்குழலாள் அசோதைக்குப்போத்தந்த**
**பேதைக்குழவி பிடித்துச்சுவைத்துண்ணும்**
**பாதக்கமலங்கள்காணீரே பவளவாயீர்! வந்துகாணீரே. (1)**

*அரு.–சீதக்கடல் ப்ரவேஶம். –வர்த்திஷ்யமாணஸங்க$_3$த்யர்த்த$_2$ம். வ்ருத்தகீர்த்தநம் (கீழித்யாதி$_3$). (திருவவதரித்தருளின ப்ரகாரத்தை) என்றது– திருப்பாற்கடல் ஸ்த$_2$ாநீயமான திருக்கோட்டியூரில் நின்றும் வந்தவதரித்தமையை யென்றபடி. (தத்காலோபலாலநங்கள்) என்றது – பன்னிரண்டு நாளில் உபலாலநங்களென்றபடி. பவளவாயித்யாதி$_3$ ஸம்பே$_3$ாத$_4$நத்தோடே இத்திருமொழியை அருளிச்செய்து "யசோதைமுன் சொன்ன" என்று அவளுடைய வார்த்தையாக நிக$_3$மிக்கையாலே (அவள் பேசின பாசுரத் தாலே) என்றது.(ஆத$_3$ரம்தோற்ற) என்றது–பவளவாயீர் என்று வர்ணித்துச்சொன்ன பத$_3$த்தைப்பற்ற; "காணீர்""காணீர்" என்ற த்$_3$விருக்தியைப் பற்றவாதல்.*



visit us at www.srivaishnavan.com

பெண்ணமுது(பெரிய திரு.6–1–2) பரோபகாரசிந்தை பண்ணுகை யாலே இந்த தே$_3$வகியும் பரோபகாரமாக ஈஶ்வரனைத் திருவாய்ப்பாடி முதலாக எல்லார்க்கும் உபகரித்தாளிறே. இவ்வுபகாரம் கம்ஸபீ$_4$தி மூலமாகையாலே. ''உள்ளமுதன்ன தேவகி'' என்கையாலே வைத$_4$ர்ம்யத்திலேகதே$_3$ஶத்$_3$ருஷ்டாந்தமாகக்கடவது. பிறப்பிக்கப் பிறந்த அம்ருததுல்யையான ஸாது$_4$ஜநங்களுக்கு அக்$_3$ரேஸரையான தே$_3$வகியார் புஷ்பாதி$_3$களாலே அலங்க்ருதமான குழலையுடைய யஶோதை$_3$ப்பிராட்டிக்குப்போகவிட்ட. ''போத்து'' என்றது– போக்கினவென்றபடி. ''அந்த'' என்று –சுட்டாகவுமாம். அன்றிக்கே, ''போத்தந்த'' என்று ஒருசொல்லாய்க்கிடக்கிறதாய், அத்தாலும் போகவிட்டென்றபடி.

(பேதை) பருவத்துக்குத்தக்க அறிவில்லாமை. (குழவி) பருவம். (பிடித்தித்யாதி$_3$) திருக்கையாலே திருவடிகளைப்பிடித்து. ''தேனேமலரும் திருப்பாதம்''(திருவாய்.1–5–5) என்று தன்

**வ்யா.முதற்பாட்டு.** (சீதக்கடல் உள்ளமுதன்ன தேவகி) அக$_3$ாத$_4$மாகை யாலே குளிர்த்திமாறுத ஸமுத்$_3$ரத்திலே தே$_3$வபே$_4$ாக்$_3$யமாகப் பிறந்த அம்ருதம் புறவமுதாம்படி ''அமுதில் வரும்பெண்ணமுது'' என்கிறபடியே உள்ளமுதாகப் பிறந்த பிராட்டியோடொத்த தே$_3$வகிப்பிராட்டி. அதாவது–அவள் பரோபகாரஶீலை யானுப்போலே, இவளும் பரோபகாரஶீலையென்றபடி. (கோதைக்குழலாள சோதைக்குப் போத்தந்த) பூமாலையாலே அலங்க்ருதமான குழலையுடைய யஶோதை$_3$ப்பிராட்டிக்கு, போகவிட்ட–வரவிட்ட வென்றபடி. ''போத்தந்த'' என்று–ஒரு முழுச்சொல்லு.

(பேதைக்குழவி) ''முக்$_3$த$_4$ஶ்ஶிஶு:'' என்னுமாபோலே. (பேதை) பருவத்துக்குத் தக்கவறிவில்லாமை. (குழவி) பருவம். (பிடித்துச்சுவைத் துண்ணும்) திருக்கையாலே பிடித்துத் திருப்பவளத்திலே வைத்து ஆஸ்வாதி$_3$த்து

***அரு.முதற்பாட்டு.*** *''சீதக்கடல்'' என்று ஶைத்யத்தை நிரூபகமாகச் சொல்லுகையாலே ஶைத்யம் நித்யமென்றுவிவக்ஷித்து ஹேதுபூர்வகமாக வருளிச்செய்கிறார் (அக$_3$ாதே$_4$த்யாதி$_3$). உள்பதத்துக்கு வ்யாவர்த்ய பூர்வகமாகத் தாத்பர்யம் (தே$_3$வேத்யாதி$_3$). (புறவமுதம்) ப$_3$ாஹ்யாம்ருதம். அத்துணஸார மென்றபடி. இங்கே தே$_3$வகிப்பிராட்டியை விஶேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அதாவதித்யாதி$_3$).*

*''குழவி'' என்றால் போராதோ? ''பேதை'' என்றும் விஶேஷிக்க வேணுமோவென்ன; ஆழ்வான்ஸ்ரீஸூக்தியை ப்ரமாணமாக வருளிச் செய்கிறார் (முக்$_3$த$_4$ஶ்ஶிஶுரித்யாதி$_3$). (என்னுமாபோலே) என்றவ நந்தரம் ''அருளிச்செய்தார்'' என்று ஶேஷம். சுவைத்துண்கைக்கு இரண்டுவகையாக*



visit us at www.srivaishnavan.com

திருவடிகளில் விழுந்தவர்கள் சொல்லக்கேட்கையாலே, ''இது பரீக்ஷிக்க வேணும்'' என்று திருப்பவளத்தில் வைத்தானென்னுதல்; அழுங்குழவி(பெரு.திரு.5–1) போல்வார் விரும்புகையாலே தானும் த4ாரக பே4ாக்3யங்களாக விரும்பினுனென்னுதல்; அன்றிக்கே அந்தர்க3த மான வையமேழுக்கும் சிறைச்சோறு ஆக்கினுனுதல். இவை புறப்படாமல் திருவிரலாலே கண் செறியிட்டானுதல். இவர் அவதாரத்தில் மெய்ப்பாட்டெல்லாம் தோற்றி அநுப4விக்கிருரிறே. (பாதக்கமலமித்யாதி3) *வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணேர் பெருமான் திருப்பாதம் பணி(திருவாய் 4–6–8)யவேண்டுகையாலே இவர் காட்டக்காணவேணுமிறே. *வேதப்பயன்கொள்ளவல்லா (பெரியாழ் திரு 2–8–10)ரிவரிறே. (பாதமித்யாதி3) திருவடித்தாமரை களை வந்துகாணுங்கோளென்கிருர். அறிவுடையார் காட்டக் காண வேணுமிறே.

''பவளவாயீர் வந்து காணீரே'' என்று பின்புமருளிச் செய்கையாலே ப்ரபத்தியின் மேலேறின ப4க்தியையும் ப4வ்யதை யையுமுடையவர்கள் நின்றநின்ற நிலைக்குள்ளேயுள்ளே புகுந்து த3ர்ஸிக்க யோக்3யரென்கிருர். (1)

**அவ.– இரண்டாம்பாட்டு.** திருவடிகளில் அகவாயிலழகை அநுப4வித்தாராய் நின்ருர் கீழ். இப்பாட்டில் திருவடிகளில்

---

**பு4ஜிக்கும். ''வடத3லமதி4ஸய்ய ரங்க3த4ாமந்! ஸயித இவார்ணவதர்ணகஃ பத3ாப்3ஜம் । அதி4முக2முத3ரே ஜக3ந்தி மாதும் நித3தி4த2 வைஷ்ணவபே4ாக்3ய லிப்ஸயா வா'' (ர.ஸ்த.2.54) இத்தால் ''விஷ்ணேஃபதே3 பரமே மத்4வ உத்ஸஃ'' (புருஷ ஸூ.) என்றும், ''தேனேமலரும் திருப்பாதம்'' (திருவாய்.1–5–5)என்றும் சொல்லக்கேட்டிருக்கையாலே திருவடிகளின் {திருவடிகள்தன்னின்} பே4ாக்3யதைதன்னைப் பரீக்ஷிக்கைக்காக, பருவத்துக்கு அநுகு3ணமான வ்யாபாரம் செய்வாரைப்போலே செய்தானுதல்; ''வையமேழுங் கண்டாள்'' (பெரியாழ் திரு 1–1–6)என்னும்படி திருவயிற்றில் கிடக்கிற லோகங்களுக்குச் சிறைச்சோருக்கினுனுதல். (பாதக்கமலங்கள் காணீரே) இப்படி இருந்துள்ள திருவடித் தாமரைகளை வந்து காணுங்கோள். கமலம் என்கையாலே– திருவடிகளிலுண்டான நிறத்தையும், ஸைத்ய–மார்த3வ– ஸௌரப்4யாதி3களையும்**

---

*ப்ரயோஜநமருளிச்செய்கிருர் (இத்தாலித்யாதி3 வாக்யத்3வயத்தாலே). (சிறைச்சோருக்குகையாவது) ஆக்குகை–நடத்துகையாய், சிறையிலேயிருக்கிற வர்களுக்கு சோறுநடத்துகை. அப்படியே உள்ளேயிருக்கிற லோகத்துக்குத் திருவடிகளில் தேனை பு4ஜிப்பித்தானென்றபடி. இப்பாட்டிலே ''முக்3த4ப்ஸிஸு`ர் வடத3லே ஸயிதோஃ ஽திதந்வா தந்வா ஜக3ந்தி பி3ப்4ருஷே ஸவிகாஸமேவ! ஐஸீமிமாம் தவ து ஸக்திமதர்கிதவ்யா மவ்யாஜதஃ ப்ரத2யஸே*



visit us at www.srivaishnavan.com

திருவுகிருடனே திருவிரல்களை அநுப$_4$விக்கிறார்.

**ஸ்வா.**—(முத்தும்மணியுமித்யாதி$_3$) திருவடிகளுக்குச் செம்பஞ்சிட்டாளாகையாலே திருவிரல்களுக்கும் மாறிமாறி ஒன்பதுவிரலுக்கும் நவரத்நவர்ணத்தையும் மற்றை ஒருவிரலுக்கு ஸ்வர்ணவர்ணத்தையுமிட்டு அலங்கரித்து அவள் அநுப$_4$வித்த ப்ரகாரம் இவர்திருவுள்ளத்திலே ப்ரகாஶித்து அநுப$_4$விக்கிற இவர்க்குத் தாத்காலிகமாய்த் தோற்றுகிறது. (முத்தித்யாதி$_3$) ''முத்தும் மணியும் வயிரமும்'' என்றது—நவரத்நத்துக்குமுபலக்ஷணம். ரத்நத்தளவி லன்றிக்கே தன் ப்ரேமத்தாலே முத்தை முற்பட இட்டு மாணிக்கத்தை இடுகையாலே ''தத்திப்பதித்து'' என்கிறது. ''தத்தி'' என்றது—தத்தவாய், மாறப்பதித்தென்றபடி. ''வணங்கி'' என்றது — வணங்கவென்றாப்போலே. ''தலைப்பெய்தாற்போல்'' என்கை யாலே நீளமுடைத்தான பத்து நீலரத்நத்தின் அக்$_3$ரத்திலே

சொல்லுகிறது. (பவளவாயீர்வந்து காணீரே) பவளம்போலே சிவந்த அத$_4$ரத்தையுடையீர் வந்து காணுங்கோளென்று. யஶோதை$_3$ப்பிராட்டி, தான் அநுப$_4$வித்த அம்ஶத்தை ஸஜாதீயைகளாய் அநுபு$_3$பூ$_4$ஷுக்களாயிருப்பாரையும் ஶ்லாகி$_4$த்துக்கொண்டு அழைத்துக்காட்டின பாசுரத்தாலே அருளிச்செய்தா ராய்த்து.(1)

**அவ.**— இரண்டாம்பாட்டு. திருவடிகளிலகவாயை அநுப$_4$வித்தாராய் நின்றார்கீழ்; இப்பாட்டில் திருவடிகளில் திருவுகிருடனே திருவிரல்களை அநுப$_4$விக்கிறார்.

**முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்**
**தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போலெங்கும்**
**பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்**
**ஒத்திட்டிருந்தவா காணீரே யொண்ணுதலீர்வந்து காணீரே(2)**

**வ்யா.**—(முத்துமித்யாதி$_3$) திருவடிகளுக்குச் செம்பஞ்சுசாத்துகிறபோது ஒன்பது விரலுக்கும் நவரத்நவர்ணத்தையும், மற்றொரு விரலுக்கு ஸுவர்ண வர்ணத்தையும் பரப$_4$ாக$_3$ம் தோற்ற மாறிமாறிச்சாத்துகையாலே நீலரத்நம் போன்ற வடிவையுடையவனுடைய திருவடிகளில் பத்து விரலும், முத்து, மாணிக்கம்

*கிமிஹாவதீர்ணः'' (அதி.ஸ்த.14)என்கிற ஶ்லோகமநுஸந்தே$_4$யம்.(1)*

*அரு.*—இரண்டாம்பாட்டு. *(அகவாயை) உள்ளங்காலை. (செம்பஞ்சு) லாக்ஷாரஸம். (நவரத்நவர்ணத்தை) என்றது – நவரத்நவர்ணத்தையுடைத்தான த்$_3$ரவ்யாந்தரத்தை யென்றபடி. (ஸுவர்ணவர்ணம்) என்றது – ஸுவர்ண ஸத்$_3$ருஶத்$_3$ரவ்யாந்தரவர்ணமென்றபடி. (மாறிமாறிச் சாத்துகையாவது) வ்யத்யஸ்த$_2$மாகச்சாத்துகை. அதாவது – முத்துச்சாத்தின வநந்தரம் வஜ்ரத்தைச்*



visit us at www.srivaishnavan.com

நவரத்நவர்ணத்தையும் பொன்னின் வர்ணத்தையும் சேர்த்தாப் போலே இருந்ததென்கை. ஓராப₄ரணத்திலே நவரத்நத்தையும் முத்தையும் அழுத்திச் சேர அநுப₄விப்பாரைப்போலே அநுப₄வித்து, இவை உபமாநம் போராமையாலே ''மணிவண்ணன் பாதங்கள் பத்துவிரலும் ஒத்திட்டிருந்தவா காணீரே'' என்கிறார். (ஒண்ணுதலீர் வந்துகாணீரே) ஒளியையுடைத்தான நெற்றியை யுடையவர்க ளென்றபடி. நுதல்–நெற்றி.

''ஒண்ணுதல்'' என்கையாலே ப்ரபத்திப்ரகாஶகமான தா₃ந்தியையுடையவர்களென்றபடி. *(2)*

*அவ.–மூன்றும்பாட்டு.* *திருவுகிரை அநுப₄வித்துத் திருக்கணைக்காலை அநுப₄விக்கிறார்.*

வயிரம் முதலான நவரத்நங்களையும் நல்லபொன்னையும் மாறிமாறிப்பதித்துச் சேர்த்தாப்போலேயாய், திருவிரல்களினுடைய லக்ஷணத்தில் ஒன்றுங்குறை வின்றிக்கே எங்கும் தன்னில் சேர்ந்திருந்தபடியைக் காணுங்கோள்; ஒள்ளிய நுதலையுடைய நீங்கள் வந்து காணுங்கோளென்கை. ''முத்தும் மணியும் வயிரமும்'' என்றவிது–அல்லாத ரத்நங்களுக்கும் உபலக்ஷணம். நுதல்–நெற்றி.

**அவ.–மூன்றும்பாட்டு.** திருவடிகளை அநுப₄வித்த வநந்தரம், திருக்கணைக்காலினழகை அநுப₄விக்கிறார்.

**பணைத்தோ ளிளவாய்ச்சி பால்பாய்ந்த கொங்கை**
**அணைத்தாரவுண்டு கிடந்த விப்பிள்ளை**
**இணைக்காலில் வெள்ளித்தளைநின்றிலங்கும்**
**கணைக்காலிருந்தவா காணீரே காரிகையீர் வந்துகாணீரே(3)**

**வ்யா.**–(பணைத்தோளிளவாய்ச்சி) பசுமைக்கும் சுற்றுடைமைக்கும்

*சாத்தாமல் மணியைச்சாத்தி, அநந்தரம் வஜ்ரத்தையும், அநந்தரம் அதுக்குப்பரப₄க₃மான பொன்னுமாக இப்ரகாரத்தாலே விஸத்₃ருஶங்களைச் சாத்துகை. இது ''தத்தி'' என்றபத₃லப்₄யம். ''தத்திப்பதித்து'' ஒன்றைவிட்டு ஒன்றாக அழுக்கி. தலைப்பெய்கையினர்த்த₂ம். (சேர்த்தாப்போல்) என்றது– ''ஒத்திட்டிருந்தவா'' என்றதுக்குத் தாத்பர்யமுகே₂ந ஶப்₃த₃ார்த்த₂மருளிச் செய்கிறார் (லக்ஷணத்திலித்யாதி₃). லக்ஷணம்–ஸாமுத்₃ரிகலக்ஷணம். ''மணிவண்ணன் பாதங்களில் பத்துவிரலும் முத்தும் மணியும் வயிரமும் நன் பொன்னும் தத்திப்பதித்துத் தலைப் பெய்தாற்போலிருக்கிற நகங்களோடே கூடி எங்குமொத்திட்டிருந்தவா காணீர்'' என்றந்வயம். (2)*

*அரு.–மூன்றும்பாட்டு. ''பணை'' மூங்கில். இதின் ஸ்வப₄ாவத்தைப்பற்ற, தாத்பர்யமருளிச்செய்கிறார் (பசுமைக்கு மித்யாதி₃). (சுற்றுடைமை)*

**ஸ்வா.–**(*பணையித்யாதி$_3$*) பசுத்தமூங்கில் போலேயிருக்கிற தோளேயுடையளுமாய், பருவத்தால் இளேயளுமான ஆய்ச்சி. இப்போது இவளே வர்ணிக்கிறது ப$_4$ர்த்ருஸம்ஶ்லேஷ யோக்$_3$யமான காலங்களிலும் பிள்ளேயை அணைக்கையாலே. பிள்ளேயை அணைத்து, பிள்ளே வாய்வைப்பதற்கு முன்னே நெறித்துப் பாய்ந்த முலேயைக் கொடுக்க, வயிறுர உண்டு நிர்ப$_4$ரனுய்க்கிடந்ததுகண்டு ''இப்பிள்ளே'' என்று ஸமுத$_3$ாயஶோபை$_4$யை அநுப$_4$விக்கப்புக்கு, ஒன்றுக் கொன்று ஒப்பான திருவடிகளில் ப்ரகாஶிக்கிற வெள்ளித்தளே சித்தாபஹாரம் பண்ணச்செய்தேயும் அத்தை ஒழித்து அதுமிகை யான திருக்கணேக்காலே அநுப$_4$வித்து, இது இருந்த ப்ரகாரத்தை அநுப$_4$வயோக்$_3$யரான நீங்களும் வந்து காணுங்கோ ளென்கிறுர். ''காரிகையீர்'' என்கிறது காமதந்த்ரந்யாயத்தாலே வடிவழகில் வாசியறிந்து ஸ்நேஹிகளுமாய் அவயவாந்தரத்தில் போகமாட்டாத யுவதிகளே அழைத்துக் ''காணிகோள்'' ''காணிகோள்'' என்கிறுர்.

''காரிகையீர்'' என்கையாலே ப$_4$க்திபாரவஶ்யமுடையாரை அநுப$_4$விக்க அழைக்கிறுர். *(3)*

**அவ.–நாலாம்பாட்டு.** திருக்கணேக்காலே அநுப$_4$வித்த அநந்தரம் திருமுழந்தாளே அநுப$_4$விக்கிறுர்.

செவ்விக்கும் வேய்போலேயிருந்துள்ள தோளேயுடையளாய், பருவத்தால் இளேயளுமான ஆய்ச்சியுடைய. இப்போது இவளே வர்ணிக்கிறது, அழகுக்கும் பருவத்துக்குமீடாக பே$_4$ாக$_3$பரவஶையாயிருக்கையன்றிக்கே, பிள்ளேயை ஸ்நேஹித்து நோக்கிக்கொண்டு போருமவளென்னுமிடம் தோற்றுகைக்காக. (பால்பாய்ந்தகொங்கை) ஸ்நேஹத்தாலே நெறித்துப் பால் சொரிகிற முலேயை. (அணைத்தாரவுண்டு கிடந்தவிப்பிள்ளே) திருக்கைகளாலே அணைத்து வயிறுர வுண்டு, அத்தாலே ஹ்ருஷ்டனுய்க்கிடந்த இப்பிள்ளேயுடைய. (இணேக்காலி லித்யாதி$_3$) அந்யோந்யம் சேர்த்தியழகையுடைய திருவடிகளில் வெள்ளித் தண்டைநின்று விளங்காநிற்கிற கணேக்காலின் அழகிருந்தபடியை, அநுப$_4$வ யோக்$_3$யரானவர்கள் வந்து காணுங்கோள். (காரிகையீர் வந்து காணீரே) அழகுடை யவர்களாகையாலே அழகின் வாசியறியும் நீங்கள் வந்துகாணுங்கோள். (3)

**அவ.நாலாம்பாட்டு.** திருக்கணேக்காலினழகை அநுப$_4$வித்தவநந்தரம், திருமுழந்தாளினழகை அநுப$_4$விக்கிறுர்.

**உழந்தாள் நறுநெய் யோரோதடாவுண்ண**
**இழந்தாளெரிவினு லீர்த்தெழில் மத்தின்**
**பழந்தாம்பா லோச்சப் பயத்தால் தவழ்ந்தான்**
**முழந்தா ளிருந்தவா காணீரே முகிழ்முலேயீர்வந்து காணீரே (4)**

*வர்த்துலதை. (ஆய்ச்சி) தாய்.(3)*

*ஸ்வா.–(உழந்தித்யாதி₃) ஆயாஸித்துக் கடைந்து ஒரோ தடாக்களிலே சேர்த்துவைத்த நெய்யை உண்ணக்கண்டு, ''உண்டநெய் பிள்ளைக்கு ஸாத்மியாது'' என்று பிள்ளையை இழந்தாளாக நினைத்து ப₄யப்பட்ட உழற்றியாலே. ''ஈர்த்து'' என்றது – இழுத்தென்றபடி. ''எழில் மத்து'' என்று – எயிறு விளங்காநின்ற மத்தென்றபடி. மத்திலே சுற்றிக்கடைந்த பழந்தாம்பாலென்றபடி. நல்லதாம்பு தேடும்போது இவனைவிட வேணுமே. அத்தாலே, கண்டதோர் கயிற்றை எடுக்கையிறே உள்ளது. தாம்பாலே ஓங்கினவளவிலே அடித்தாளாக நினைத்து ப₄யத்தாலே தவழப்புகுந்த வாறே கோபத்தை மறந்து ''தவழ்ந்தான்'' ''தவழ்ந்தான்'' என்று தவழ்ந்து கன்றின் பின்னே போன முழந்தாளை வெறும்புறத்திலே அவள் அநுப₄வித்த ப்ரகாரத்தைத் தாமும் அநுப₄வித்து அநுப₄வ யோக்₃யரைக் ''காணீர்'' ''காணீர்'' என்று காட்டுகிறுர் (முகிழ் முலையீர்) –ப₄க்த்யங்குரம் ...(4)*

***அவ.அஞ்சாம்பாட்டு.** திருமுழந்தாளைவிட்டுத் திருத்துடையை அநுப₄விக்கிறுர்.*

visit us at www.srivaishnavan.com

**வ்யா.**–(உழந்தாள்) ஆயாஸித்தவள். கறந்து, காய்ச்சித்தோய்த்துக் கடைந்து வெண்ணெயாக்கி உருக்கித் தடாக்களிலே சேர்த்து வைத்த வருத்தத்தையெல்லாம் சொல்லுகிறது. (நறுநெய் ஓரோதடாவுண்ண) நறுவிதான நெய்யை ஒவ்வொருதடாவாக ஒன்றும் ஶேஷியாதபடி உண்ண. (இழந்தாள் எரிவினுல் ஈர்த்து) ''உண்டநெய் பிள்ளைக்கு ஸாத்மியாது'' என்று பிள்ளையை இழந்தாளாக நினைத்து ப₄யப்படுகையால் வந்த வயிற்றெரிச்ச லாலே கையைப்பிடித்திழுத்து. (எழில்மத்தின் பழந்தாம்பாலோச்ச) அழகிய மத்திலே சுற்றிக் கடைந்து, பழகின தாம்பாலே அடிப்பதாக ஓங்க. (பயத்தால் தவழ்ந்தான்) ப₄யத்தாலே அத்தைத் தப்புவதாகத் தவழ்ந்தவனுடைய. (முழந்தாளிருந்தவா காணீரே) திருமுழந்தாளினழகிருந்தபடியைக் காணுங்கோள். (முகிழ்முலையீர் வந்துகாணீரே) முகிழ்ந்தமுலையையுடையீர் வந்து காணுங்கோள்.(4)

**அவ.அஞ்சாம்பாட்டு.** திருமுழந்தாளினழகை அநுப₄வித்தவநந்தரம், திருத்துடையினழகை அநுப₄விக்கிறுர்.

**பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத் துண்டிட்டு**
**உறங்குவான் போலே கிடந்தவிப் பிள்ளை**
**மறங்கொ ளிரணியன் மார்வைமுன் கீண்டான்**
**குறங்குகளை வந்து காணீரே குவிமுலையீர் வந்து காணீரே(5)**

*அரு.–நாலாம்பாட்டு.''ஈர்த்து'' என்றதினர்த்த₂ம்–(இழுத்து) என்றது ''ஓச்ச'' அடிக்க– உத்₃யோகி₃க்க. ''உழந்தாளான அசோதை தன்னுடைய ஒரோதடாவுண்ண அவனை இழந்தாளாகநினைத்து, ''எரிவினுலீர்த்து எழில் மத்தின் பழந்தாம்பாலோச்சப் பயத்தால் தவழ்ந்தான்'' என்றந்வயம். (4)*

(பு.ஸ௭) என்கிறபடியே ப்ராப்தித$_3$ஶையில் ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வ ஸஹகாரிகளாயும், இப்படி ப$_3$ஹுமுக$_2$மான உபகாரத்தாலே ஸர்வாவஸ்தை$_2$யிலும் ததீ$_3$யரே உத்$_3$தே$_3$ஶ்யரென்று அத்$_4$யவஸித்து, தமக்கு வைஷ்ணவ விஷயீகாரத்துக்கு முன்பே அஜ்ஞாத ஜ்ஞாபநமுக$_2$த்தாலே ப$_4$க$_3$வத்$_3$ விஷயத்திலே மூட்டின மஹோபகாரகரான ஆழ்வார்தம்மையே பற்றுகிறார்.

**பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்$_2$யாநாவதாரிகை முற்றிற்று.**

---

## கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு அழகியமணவாளப்பெருமாள்நாயனார் அருளிச்செய்த வ்யாக்$_2$யாநம்

## அவதாரிகை

ஸம்ஸாரிசேதநரிற்காட்டில் ப$_4$க$_3$வத்பரராய், அந்த ப$_4$க$_3$வத்$_3$ வைப$_4$வத்தை அஜ்ஞரான ஸம்ஸாரிகளுமறியும்படி அவ்வவ புராண முக$_2$ங்களாலே உபதே$_3$ஶித்த பராஶராதி$_3$ பரமரிஷிகளுக்கு வாசியுண்டு.

இப்படி உபதே$_3$ஶியாநிற்கச்செய்தேயும் ''நிரஸ்தாதிஶய'' (வி.பு.6–5–58,59)இத்யாதி$_3$யாலே பரமபுருஷார்த்த$_2$ரூபையான ப$_4$க$_3$வத் ப்ராப்தியைச் சொல்லி ''தத்ப்ராப்திஹேதுர்ஜ்ஞாநஞ்ச கர்ம சோக்தம்'' (வி.பு.6–5–60) என்று தொடங்கி ப்ராப்திஸாத$_4$நமான உபாஸநத்தையும் உபதே$_3$ஶியாநிற்கச்செய்தேயும், காமாதி$_3$ புருஷார்த்த$_2$ாந்தரங்களையும் கலந்துகட்டியாக உபதே$_3$ஶித்த அந்த ரிஷிகளிற்காட்டில் ப$_4$க$_3$வத் ப்ரஸாத$_3$ ஹேதுகமான மயர்வறமதிநலங்களை உடையருமாய். பரோபதே$_3$ஶ ஸமயத்திலும் ''வீடாம் தெளிதருநிலைமை'' (திருவாய்1–3–2)என்று தொடங்கி ''வீடேபெறலாமே'' (திருவாய் 10–5–5)என்று பரமபுருஷார்த்த$_2$த்தையே முதல் நடு இறுதியாக உபதே$_3$ஶித்து, அதுக்கு ஸாத$_4$நமும் ''வண்புகழ்நாரணன் திண்கழல்சேரே'' (திருவாய்1–2–10)

---

ப$_4$க$_3$வதாபி$_4$முக்$_2$யமுள்ள மாத்ரங்கொண்டென்றபடி. (தத்$_3$விஷயத்திலே இப்போது) என்றது இவ்விபூ$_4$தியில் இருக்கும் காலம் (ப்ராப்தி த$_3$ஶையில்)என்றது மோக்ஷத$_3$ஶையில் என்றபடி.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்$_2$யாந அவதாரிகையின் அரும்பதம் முற்றிற்று.

**அழகியமணவாளப்பெருமாள்நாயனார் வ்யாக்$_2$யாநத்தின் அரும்பத$_3$வுரை**

அரு.– வக்த்ருவைலக்ஷண்யம் அருளிச்செய்வாராய், ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் உள்ளவாசியை அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரி சேதநரித்யாதி$_3$).



visit us at www.srivaishnavan.com

''திருநாரணன்தாள் காலம் பெறச்சிந்தித்துய்ம்மினோ'' (திருவாய்4–1–1) என்று அவன்திருவடிகளேயென்றும் உபதே3ஶித்து, அவ்வளவன்றிக்கே, ''வழுவிலாவடிமைசெய்ய வேண்டும்நாம்'' (திருவாய்3–3–1) ''அடிக்கீழ மர்ந்து புகுந்தேனே'' (திருவாய்6–10–10) என்று அவற்றைத்தாம் அநுஷ்டி2த்துப் போந்த நம்மாழ்வாருக்கு நெடுவாசியுண்டு. இப்படி ப4க3வத்3விஷயமே புருஷார்த்த2ஸாதநங்களென்று பூர்ணோபதே3ஶம் பண்ணின ஆழ்வாரிற்காட்டில் ஆழ்வாரே புருஷார்த்த2பூ4தராய், அவரைப் பெறுகைக்கு ஸாத4நமும் அவர்திருவடிகளே என்றிருக்கும் ஸ்ரீமது4ரகவிகளுக்கு நெடுவாசியுண்டு.

''என்னப்பனில் நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால் அண்ணிக்கு மமுதூறும் என்னுவுக்கே'' (கண்–1)என்றும், ''மேவினேன் அவன் பொன்னடி'' (கண்–2)என்றும் அநுஸந்தி4த்தவரிறேஇவர். ஆழ்வார் ப்ரத2மபர்வத்திலே நின்றவர்; இவர் சரமபர்வத்திலே நின்றவர்; அவர் ஸங்க்3ரஹத்திலே அவத4ாரணத்திலே நிஷ்ட2ர்; இவர் அதினுடைய விவரணநிஷ்ட2ர்; அவ்வாழ்வாருக்கு அநந்யபோ4கத்வத்துக்கு ''நமக்கும் பூவின்மிசை நங்கைக்குமின்பன்'' (திருவாய் 4–5–8)என்று நாய்ச்சிமாரில் பிராட்டி நித3ர்ஶநமாமாபோலேயும், கைங்கர்யத்வரைக்கும் பாரதந்த்ர்யத் துக்கும் இளையபெருமாள் நித3ர்ஶநமாமாபோலேயும், முமுக்ஷுக்களின் துர்க3திகண்டு பரோபதே3ஶம் பண்ணுகைக்கு ப்ரஹ்லாத3ன் நித3ர்ஶந மாமாபோலேயும், இவருக்குத் ததீ3யபாரதந்த்ர்யத்துக்கு ''வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசுவருவிப்பரேல் அதுகாண்டும்'' (நாச்.திரு.10–10) என்ற பெரியாழ்வார்திருமகளார் நித3ர்ஶநமாதல், நித்யராய்ப் போந்தாரில் ஸ்ரீஶத்ருக்4நாழ்வான் நித3ர்ஶநமாதல், முமுக்ஷுக்களில் ''ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம்'' (ஸ்தோ.ரத்.5)

visit us at www.srivaishnavan.com

(பூர்ணோபதே3ஶம்) என்றது–காமாதி3புருஷார்த்த2ாந்தரங்கள் கலசாதே ஈஶ்வரனே உபாயமென்றும், அவன்திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமே புருஷார்த்த2மென்றும் உபதே3ஶிக்கை.

இவர் ஆழ்வாரையே ப்ராப்யப்ராபகமென்று பற்றியிருந்தாரோவென்ன அருளிச்செய்கிறார் (என்னப்பனில் நண்ணித்தென்குருகூரென்று தொடங்கி). ஆழ்வாரிற் காட்டில் மது4ரகவிகளுக்கு நெடுவாசியுண்டெனனுமதை விவரிக்கிறார் (ஆழ்வார் ப்ரத2மபர்வத்திலே நின்றவரென்று தொடங்கி). இருவர் நிஷ்டை2யும் எத்தைப்பற்றிவருகிறதென்ன அருளுகிறார் (அவர் ஸங்க்3ரஹேத்யாதி3). (அவத4ாரணம்) உகாரம். (விவரணம்) நமஸ்ஸு. ப4க3வத்3விஷயத்திலே ப்ரவணரானு ருடைய ஆகாரங்களெல்லாம் ஆழ்வாருக்கு உண்டானப்போலே சரமபர்வநிஷ்ட2ர்க ளுடைய ஆகாரங்களெல்லாம் இவர்க்குண்டென்று அருளிச்செய்கிறார் (ஆழ்வார்க்கு அநந்யபோ4க3த்வத்துக்கென்று தொடங்கி). இத்தால் ஆழ்வாரோடே ஸாம்யம்

என்ற பெரியமுதலியார் நித₃ர்ஶநமாதலாமித்தனை.

ஸ்ரீமத்ருக்₄நன் ராமகு₃ணத்தில் கால்தாழ்ந்திலன்; இவர் க்ருஷ்ண கு₃ணங்களில் கால்தாழ்ந்திலர், இதுவாசி; ஆழ்வார் ப₄க₃வத்₃விஷயத்தைக் கவிபாடுகிற நாவாலே தம்முடைய வைப₄வம் சொன்னாரித்தனைபோக்கி, அமுதூறுகிற இவருடையநாவாலே கேட்கப்பெறாத குறைதீர்க்கிறாராய்த்து இவர்; ''அவன் சின்னமும் திருநாமமும் இவள்வாயனகள் திருந்தவே'' (திருவாய் 6–5–7) என்று அவன்கு₃ணங்கள் அவ்வாழ்வார்வாக்காலே திருந்தினாப்போலேயாய்த்து ஆழ்வாருடைய கு₃ணங்களும் இவர் வாக்காலே திருந்தினபடி.

அப்படியே இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄மும், ''த்ரைகு₃ண்ய விஷயா வேதா₃ঃ''(கீ₃தை 2–45) என்று கு₃ணத்ரயவஶ்யர்க்கு கு₃ணாநுகு₃ணமான ப₂லங்களைச் சொல்லுகிற வேத₃ங்கள் போலேயும், ''சீர்த்தொடையாயிரம்'' (திருவாய் 1–2–11) என்று ப₄க₃வத்₃கு₃ணகப்ரதிபாத₃கமான திருவாய் மொழி போலேயுமன்றிக்கே, ஆழ்வாருடைய தி₃வ்யகு₃ணங்களையே ப்ரதிபாதி₃க்கையாலும், வேத₃ம் போலே அநந்தமாயிருத்தல், திருவாய் மொழி போலே ஆயிரம்பாட்டாயிருத்தல் செய்கையன்றிக்கே, ஸங்க்₃ரஹ மாயிருக்கையாலும் வாசிபட்டிருக்கும்; திருவாய்மொழி வேத₃ஸாரமாய், திருவாய்மொழியினுடைய ஸாரமாயாய்த்து இப்ரப₃ந்த₄மிருப்பது.

ஒருமுமுக்ஷுவுக்கு ஆத₃ரணீயராயிருப்பார் நாலுவ்யக்திகளா யிருப்பர்கள்; ஸர்வேஶ்வரனும், பிராட்டியும், ஆசார்யனும், ஸ்ரீவைஷ்ண வர்களும். அதில் ஸர்வேஶ்வரன், அடியிலே இழந்துகிடந்த கரணகளேப₄ரங்களைத் தன்கருணையாலே கொடுத்து இவனைக் கரைமரம்

visit us at www.srivaishnavan.com

சொல்லிற்றாயிற்று. (பெரியமுதலியார்) என்றது–ஆளவந்தாரை. (நித₃ர்ஶநம்) என்றது– இருவரும் ஆழ்வாரையே பற்றுகையாலே; இந்தப்ரப₃ந்த₄த்தாலே இவர் கொண்டாடவேணுமோ? ஆழ்வார் ப₄க₃வத்₃விஷய ப்ரவணமான தம்முடைய திருப்பவளத்தாலே தம்முடைய வைப₄வத்தை 'துவளில் மாமணிமாடம்' தொடக்கமான திருவாய்மொழிகளிலே அருளிச்செய்யவில்லை யோவென்ன, க்ருஷ்ணன் தன்வாயாலே சொன்ன கீ3தையோபாதி பே₄ாக்₃யமாயிராத குறையுண்டு, அமுதூறுகிற இவர் திருப்பவளத்தாலே அருளிச்செய்யக்கேட்கையாலே அக்குறை தீரப்பெற்ற தென்கிறார் (ஆழ்வார் ப₄க₃வத்₃விஷயத்தைக் கவிபாடுகிறநாவாலென்று தொடங்கி). அப்படி இவர் திருப்பவளத்தாலே அருளிச்செய்கையாலே திருந்தி பே₄ாக்₃யமாயிருந்ததோவென்ன அருளிச்செய்கிறார் (அவன் சின்னமும் திருநாமமுமென்று தொடங்கி).

(அப்படியே இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄மும்) என்றது– ஆழ்வாரிற்காட்டில் இவர்க்கு நெடுவாசியுண்டானாப்போலே இவரருளிச்செய்த ப்ரப₃ந்த₄முமென்றபடி.

முமுக்ஷுவுக்கு நாலுபேர் உத்₃தே₃ஶ்யராய் அவர்களில் வைத்துக்கொண்டு

சேர்க்கும் தே3வனாகையாலும், இவனுக்கு ஆத4ாரபூ4தனாகையாலும், இவனுக்கு இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரத்துக்கு உபாயபூ4தனாகை யாலும், அகாரண ஸுஹ்ருத்தாகையாலும், ப்ராப்யபூ4தனாகையாலும் ஆத3ரணீயனாயிருக்கும். ''மாதாபிதா''(ஸுபால–16) என்கையாலே ப்ரியபரத்வஹிதபரத்வங்களைச் சொல்லிற்று. ''ப்4ராதா'' என்கையாலே அல்லாத ப3ந்த்4வந்தரங்களுக்குமுபலக்ஷணம். ''நிவாஸ:'' என்கையாலே ஆத4ாரத்வம் சொல்லிற்று. ''ஶரணம்'' என்கையாலே உபாயப4ாவம் சொல்லிற்று. ''ஸுஹ்ருத்'' என்கையாலே ஶோப4நாஶம்ஸி என்னுமிடம் சொல்லிற்று. ''க3தி:'' ''க3ம்யத இதி க3தி:''யாய், ப்ராப்யப4ாவம் சொல்லிற்று. ''நாராயண:'' என்று இவையெல்லாமாகவற்றான வஸ்து ஸ்வப4ாவம் சொல்லிற்று. ''யேந யேந வியுஜ்யந்தே ப்ரஜா: ஸ்நிக்3தே4ந ப3ந்து4நா। ஸ ஸ பாபாத்3ருதே தாஸாம் து3ஷ்யந்த இதி கு4ஷ்யதாம்।। (ஶாகுந்தலம் 6–23) என்று ஒருசேதநவிஶேஷத்துக்கு இது உண்டாகச் சொல்லாநின்றால் இவ்விஷயத்துக்குச் சொல்லவேண்டாவிறே. ''பாபாத்3ருதே'' என்னவேண்டாதபடி அவர்ஜநீயமான ஸம்ப3ந்த4மும் இங்கே விநியோக3ம் கொள்ளும்படியாயாய்த்து இவ்விஷயமிருப்பது. ''க3திர்ப்ப4ர்த்தா ப்ரபு4ஸ்ஸாக்ஷீ நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்'' (கீதை 9–18) என்று அவன் தானே சொன்னானிறே.

பிராட்டி, இவன்பக்கலிலே மாத்ருத்வப்ரயுக்தமாக நிருபாதி4க வத்ஸலையாகையாலும், இவன் ப4க3வதா3ஶ்ரயண ஸமயத்தில் தன்னுடைய பூர்வாபராத4பீ4தனாய், அங்கு அணுகக்கூசினால் இவன் பூர்வாபராத4த்தை அவன்முக2ங்கொண்டு பொறுப்பித்துச் சேர்ப்பிக்குமவ ளாகையாலும், இவனுக்கு இவ்வுபாயவிஷயமான வ்யவஸாயத்தைக் கொடுக்குமவளாகையாலும், அவனோபாதி ஸ்வாமிநியாகையாலும்,

---

ஆசார்யன் மிகவும் உத்3தே3ஶ்யனாகையாலே அந்த ஆசார்யவைப4வத்தை அறிந்த இவர் ஆசார்யன்செய்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாதே அவனை வாயாரப்புகழ்ந்து அவனுடைய உபகாராநுஸந்த4ாநப்ரீதிக்குப் போக்குவீடாக இப்ரப3ந்த4முக2த்தாலே ஆழ்வாருடைய வைப4வத்தைப்பேசுகிறாரென்கிறார் (ஒரு முமுக்ஷுவுக்கு ஆத3ரணீயராயிருப்பார் நாலுவ்யக்திகளென்று தொடங்கி). ''மாதாபிதா'' என்கிற ஶ்ருதிக்கு முன்னே ப்ரதிபத3தாத்பர்யம் அருளிச்செய்து கொண்டு அநந்தரம் பத3ங்களை எடுத்து அர்த்த2மருளிச்செய்கிறார் (அதில் ஸர்வேஶ்வரனென்று தொடங்கி).

ஒருவனே ஸர்வவித4ப3ந்து4வாகக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (யேநயேந வியுஜ்யந்தே) என்று தொடங்கி. ஈஶ்வரன் தான் ப4ர்த்தாவா யிருக்குமோவென்ன அருளிச்செய்கிறார் (க3திர் ப4ர்த்தாவென்று தொடங்கி). (முக2ங்கொண்டு) என்றது–அபி4முக2னாகப்பண்ணிக் கொண்டென்றபடி.



visit us at www.srivaishnavan.com

ஒருதே$_3$ஶவிஶேஷத்தேறப்போனாலும் அவனுக்கே கைங்கர்யவர்த்$_3$த$_4$கையாகையாலும், தன்னைக்கிட்டுமிடத்தில் ஒரு புருஷகாராந்தரநிரபேக்ஷையாகையாலும் ஆத$_3$ரணீயையாயிருக்கும்.

ஆசார்யன் இவனுக்கு ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தையும், பிராட்டி வைப$_4$வத்தையும் கருந்தரையிலே உபதே$_3$ஶிக்குமவனாகையாலும், தானநுஷ்டி$_2$த்துக்காட்டி இவனை அநுஷ்டி$_2$ப்பிக்குமவனாகையாலும், இவன்குற்றம் பார்த்தவளவிலும் கைவிடாதவனாகையாலும், இவனோடே ஸஜாதீயனாகையாலே ஸுலப$_4$னாகையாலும், இவனுடைய க்ருதஜ்ஞதையடியாகப் பண்ணும் கிஞ்சித்காரங்களுக்கு ஶரீரஸம்ப$_3$ந்த$_4$முக$_2$த்தாலே இங்கே ப்ரதிஸம்ப$_3$ந்தி$_4$யாகையாலும், தன்கார்யத்தை மறந்தாகிலும் இவனுடைய ஹிதமே பார்த்துப் போருமவனாகையாலும் ஆத$_3$ரணீயனாயிருக்கும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் இவனுக்கு ப்ரத$_2$மத்திலே ருசிஜநகராகையாலும், ஆசார்யோபதி$_3$ஷ்டமான ஜ்ஞாநத்துக்கு வர்த்$_3$த$_4$கராய் உசாத்துணையாகையாலும், ஆசார்யப்ரேமத்தை அபி$_4$வ்ருத்$_3$த$_4$மாக்குமவர்களாகையாலும், இவனுக்கு ஶேஷிகளாகையாலும், இவனுக்கு ப்ரக்ருதிவஶ்யதையாலே சில ஸ்க$_2$லித்யங்கள் பிறந்தாலும் அத்தைத் தெளியப்பண்ணவும் வல்லவர்களாய் இந்த முக$_2$த்தாலே ஆத$_3$ரணீயராய்ப் போருவர்கள்.

இவற்றை ஶ்ருதியும் "மாத்ருதே$_3$வோ ப$_4$வ, பித்ருதே$_3$வோ ப$_4$வ, ஆசார்யதே$_3$வோ ப$_4$வ, அதிதி$_2$தே$_3$வோ ப$_4$வ" (தை.ஶீக்ஷா. *11–2*) என்று சொல்லிவைத்தது; இங்கு அதிதி$_2$யாகிறான் – ஸ்ரீவைஷ்ணவனாய்த்து. அதிதி$_2$களாகிறார்–தாங்கள் முன்புநின்ற நிலைகுலைந்து இவனிருக்கிற வர்க்க$_3$த்திலே புகுமவர்களிறே. இவர்களும் தந்தாமுடைய ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை த்யஜித்து இவன் பற்றிநிற்கிற ஶரணத்திலே ஆக$_3$தரானவர்களாய்த்து; "உபாயே க்$_3$ருஹரக்ஷித்ரோஃ ஶப்$_3$த$_3$ஃ ஶரணமித்யயம்" (அஹிர்பு$_3$த்$_4$ந்யஸம்ஹிதை *37–29*) இத்யாதி$_3$; அப்படி வந்தவனை குலசரணகோ$_3$த்ராதி$_3$களை ஆராயாதே ஸத்கரிக்கவேண்டுமோபாதி வைஷ்ணவனுடைய குலாதி$_3$களை ஆராயாதே அதிதி$_2$ஸத்காரங்களைப்பண்ணக்கடவன். "அதிதி$_2$ர்யத்ர ப$_4$க்$_3$நாஶோ க்$_3$ருஹாத் ப்ரதிநிவர்த்ததே। ஸ தஸ்மை து$_3$ஷ்க்ருதம் த$_3$த்த்வா புண்யமாதா$_3$ய க$_3$ச்ச$_2$தி॥ (வி.பு.*3–9–15;3–11–66*) என்கிறபடியே அதிதி$_2$களுடைய அஸத்காரத்தில் பாபாக$_3$மநமும் புண்யக்ஷயமும் பிறக்குமென்கையாலே, இவனும் இவ்வைஷ்ணவனை ஆத$_3$ரியானாகில் ப$_4$க$_3$வந்நிக்$_3$ரஹரூபமான பாபம்

(இவன் பற்றிநிற்கிற சரணத்திலே) என்றது ஶ்லேஷையாய், உபாயத்தையும் க்$_3$ருஹத்தையும் சொல்லுகிறது. ஈஶ்வரன் து$_3$ராராத$_4$னனபடியென்? ஆசார்யன்



visit us at www.srivaishnavan.com

வரும். தத3நுக்3ரஹரூபமான புண்யமும் இவனைவிட்டுப் போகக்கடவது.

இனி இந்நால்வரில், அத்யந்தாத3ரணீயராவாரரென்னில், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வைப4வஜ்ஞாநமும், பிராட்டியுடைய வைப4வஜ்ஞாநமும், ஈஶ்வரனுடைய ஸர்வப்ரகாரவைப4வ ஜ்ஞாநமும் இவ்வாசார்யாங்கீ3காராநந்தரமாகையாலே ''யதா2 தே3வே ததா2 கு3ரௌ'' (ஶ்வே 6–23) என்கிற அளவன்றிக்கே விஶேஷேண ஆத3ரணீயன் ஆசார்யனேயாய்த்து.

ஆகையாலே, இவ்வாழ்வாராகிறார் அவ்வாசார்யவைப4வமறியும வராகையாலும், ஆழ்வார்திருவடிகளிலே நெடுநாள் பரிசர்யை பண்ணி அவருடைய ப்ரஸாத3பாத்ரராய்ப் போந்தவராகையாலும், அவர் பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமுண்டாக நினைத்திராதவராகை யாலும், அவரை வாயாரப்புகழ்ந்து அவருடைய உபகாராநுஸந்த4ாந ப்ரீதிக்குப் போக்குவிடவேண்டுகையாலும், இப்ரப3ந்த4முக2த்தாலே ஆழ்வார்வைப4வத்தைப் பேசுகிறார்.

ஈஶ்வரன் து3ராராத4னாய், ஆசார்யன் ஸ்வாராத4னாயிருக்கும். ஈஶ்வரனை ஆராதி4க்கைக்குத் திருவிருத்தம் தொடக்கமான நாலுப்ரப3ந்த4ம் வேண்டிற்று. ஆழ்வாரை ஆராதி4க்கைக்கு இப்பத்துப்பாட்டுமே அமைந்தது.

**அழகியமணவாளப்பெருமாள்நாயனார் அருளிச்செய்த**
**வ்யாக்2யாந அவதாரிகை முற்றிற்று.**

---

ஸ்வாராத4னனபடியென் என்ன அருளிச்செய்கிறார் (ஈஶ்வரனை ஆராதி4க்கைக் கென்று தொடங்கி).

**அழகியமணவாளப்பெருமாள்நாயனார் அவதாரிகையின் அரும்பத3ம் முற்றிற்று.**

---

**கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்**
**பண்ணியபெருமாயன் என்னப்பனில்**
**நண்ணித்தென்குருகூர் நம்பிஎன்றக்கால்**
**அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே. (1)**

**நஞ்சீயர் வ்யாக்2யாநம்**

**முதற்பாட்டு–**(கண்ணிநுண் சிறுத்தாம்பினாலென்று தொடங்கி) (கண்ணித்தாம்பு) அப3லைகளாயிருப்பார் கட்டிவிட்ட தாம்பாகையாலே பல பிணையலாயிருக்கை. புஷ்பஹாஸஸுகுமாரமான கையாகையாலே அவிழ்க்கமாட்டானிறே. இப்பிணையல் திருமேனியிலே உறுத்து மென்றஞ்சுகிறார். (நுண்தாம்பு) பருத்து மேல் முதவாதே அழுந்தும் என்று



visit us at www.srivaishnavan.com

அஞ்சுகிருர். (சிறுத்தாம்பு) அளவில்லாமையாலே உறுத்தித் திருமேனி நோவுமென்றஞ்சுகிருர்.

(கட்டுண்ணப்பண்ணிய) ‘உரலிலிடம் குறைக்க {காண} வொண்ணுது, கயிற்றிலிடம் காணவொண்ணுது. விடில் கள்ளனுகையாலே ஓடிப்போம், கட்டினுேமாகவல்லோமே’ என்ற தாயார்முக$_2$த்தில் பயிர்ப்புதீர ஒருசுற்றுக்குப்போராத தாம்பு இரண்டுசுற்றுக்குப்போரும்படி திருமேனியி லிடம் கொடுத்தபடி. ஆஶ்ரிதர்கையாலே கட்டுண்ணுவிடில் ஶீலத்துக்குப் போராது. அநாஶ்ரிதரைக்கட்டாவிடில் ப்ரப$_4$ாவத்துக்குப் போராது. ராஜா வானவன் எதிரிகளைக் கட்டிவைக்கையும் பும்ஸ்த்வம். தன் மஹிஷியின் கையில் பூமாலையாலே கட்டுண்டுகிடக்கையும் பும்ஸ்த்வம். (பெருமாயன்) இவருடைய எத்திறமிருக்கிறபடி. அப்ராக்ருததி$_3$வ்ய ஸம்ஸ்த$_2$ாநத்தை இதரஸஜாதீயமாக்குகையும், அவனுக்கு க்ஷுத்து நலிகையும், நவநீதத்திலே ஶ்ரத்$_3$தை$_4$யுண்டாகையும், அத்தை இடுவாரில் லாதபோது களவுகாண்கையும், அத்தைத் தலைக்கட்டமாட்டாதே வாயதுகையதாக அகப்படுகையும், ஸ்ருஜ்யர்கையிலே கட்டுண்கையும், ஸம்ஸாரப$_3$ந்த$_4$த்தைத் தவிர்க்கவல்ல தான் இத்தை விட்டுக்கொள்ள மாட்டாதொழிகையும், இதென்ன ஆஶ்சர்யமோவென்கிருர். இவனுடைய மேன்மை எல்லைகாணலாம்; நீர்மை தரைகாணவொண்ணுது.

visit us at www.srivaishnavan.com

(என்னப்பனில்) கீழ் ஆசார்யருசிபரிக்$_3$ருஹீதமான அர்த்த$_2$மாகை யாலே க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லிற்று; மேல் உத்$_3$தே$_3$ஶ்யமான விஷயத்தைச் சொல்லாதே அவனை என்னப்பனென்பானென் என்னில், ஆழ்வார் அங்கீ$_3$கரிக்கைக்காக அங்கே தமக்கொரு ஸம்ப$_3$ந்த$_4$ம் சொல்லு கிருர். ஒன்றைக்குறித்துப் போம்போது “நீரும்நிழலும் நன்றுயிருந்தது” என்று ஒதுங்கினுல் உத்$_3$தே$_3$ஶ்யமாகவேணுமோ?

(நண்ணி) இப்படுகுழியைத் தப்பினுலிறே என்கிருர். படுகுழியென் பானென்னென்னில்; ப$_4$க$_3$வத்ப்ராப்திக்கு ஶப்$_3$த$_3$ாதி$_3$விஷயங்கள் விரோதி$_4$யானுப்போலே ஆழ்வாரைப் பற்றுகிற இவர்க்கு ப$_4$க$_3$வத்$_3$ விஷயம் விரோதி$_4$யென்றபடி. அவற்றுக்கு அல்பாஸ்தி$_2$ரத்வாதி$_3$தோ$_3$ஷ முண்டாகையாலே விடலாம். இங்கு அங்ஙனன்று; நிலைநின்ற ப்ரதிப$_3$ந்த$_4$கம். (தென்குருகூர்நம்பி) ஸர்வேஶ்வரன் ப்ராப்யத்தில் ப்ரத$_2$மாவதி$_4$ யாகையாலே அரைவயிருகப்பேசி, ஆழ்வார் சரமாவதி$_4$யா கையாலே பூர்ணராகப் பேசுகிருர். (என்றக்கால்) ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் மநோவாக்காயங்கள் மூன்றுலும் அந்வயிக்கவேணும்; அதெல்லாம் வேண்டா; உக்திமாத்ரமமையும் இங்குத்தைக்கென்கிருர். (அண்ணிக்கு மமுதூறும்) ரஸபத$_3$ார்த்த$_2$ங்களிற்காட்டில் இதுக்கு வ்யாவ்ருத்தி; எல்லாப்

பத$_3$ார்த்த$_2$ங்களும் நாக்கிலே இட்டால் இட்டபத$_3$ார்த்த$_2$ம் மாண்டவாறே ரஸமும் மாளும். இது அங்ஙனன்றிக்கே ஒருகாலிட்டால் உள்ளதனையும் அமுது ஊற்றுமாறுதென்கிறார். (என்நாவுக்கே) அவர்கள் 'எங்களுக்கு இங்ஙனிருக்கிறதில்லையீ' என்றார்கள்; ப$_4$க$_3$வத்$_3$விஷயமும் ரஸித்து அதுக்கெல்லைநிலமான ப$_4$ாக$_3$வதவிஷயத்தளவும் ரஸித்த என்நாவுக் கல்லது; அத$_2$வா; எது ரஸித்துப்போந்த நாவுக்கு எது ரஸிக்கிறதுதான். இத்தால் சொல்லிற்றாய்த்து ப்ரத$_2$மாவதி$_4$யோடு சரமாவதி$_4$யோடு வாசியற இவர் ஆழ்வாருக்கு அநந்யார்ஹரானபடி.

**முதற்பாட்டுக்கு நஞ்சீயர் வ்யாக்$_2$யாநம் முற்றிற்று.**

---

**நம்பிள்ளை ஈடு**

**முதற்பாட்டு.** (கண்ணியித்யாதி$_3$) ''உரலினோடிணைந்திருந் தேங்கிய வெளிவு எத்திறம்''(திருவாய்1–3–1) என்றும், ''பிறந்தவாறும்'' (திருவாய் 5–10–1), ''பையவேநிலையும்'' (திருவாய் 5–10–3) என்றும் அவர் உத்$_3$தே$_3$ஶ்யமாகப் பற்றுகிற விஷயமிறே இவருக்கு இப்போது வெளிறாய்க் கழியுண்கிறது. நவநீதசௌர்யநக$_3$ரக்ஷோப$_4$த்தை அநுஸந்தி$_4$த்து அவர்மோஹித்துக் கிடக்கும் துறையிலேயிறே இவர் இப்போது தெளிந்திருந்து வார்த்தை சொல்லுகிறது. (கண்ணிநுண் சிறுத்தாம்பினால்) ஆழ்வார்பக்கலிலே ந்யஸ்தப$_4$ரரானபடி; அவருடைய உத்$_3$தே$_3$ஶ்யவஸ்துவைக்கட்டின கயிற்றினுடைய உள்மானம் புறமானம் ஆராயும்படியிறே இவர் கையொழிந்தபடி ப$_4$க$_3$வத்$_3$விஷயத்திலே.

(கண்ணித்தாம்பு) உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பல பிணையலை உடைத்தாயிருக்கை. (நுண்தாம்பு) உடம்பிலே அழுந்தும்படி நேரிதாயிருக்கை. (சிறுத்தாம்பு) குறுகியிருக்கை. உரலைச் சுருக்க வொண்ணாது; கயிற்றை நெடுக்கவொண்ணாது. ''ஸதை$_3$கரூபரூபாய'' (வி.பு.1–2–1) என்கிற இவனுடைய உடம்பை நெருக்கி இடங்கண்டு கட்டுமித்தனையிறே செய்யலாவது. ''கண்ணியார் குறுங்கயிற்றால் கட்டவெட்டென்றிருந்தான்'' (பெரிய திரு.5–6–7) ''கண்ணிக்குறுங் கயிற்றால் கட்டுண்டான் காணேடீ'' (பெரிய திரு.11–5–5) என்றும் எல்லாரும் ஈடுபடுந் துறையிறே இதுதான்.

(கட்டுண்ணப்பண்ணிய) ''ஸம்ஸாரப$_3$ந்த$_4$ஸ்தி$_2$தி மோக்ஷ ஹேது:'' (ஶ்வே 6–16) என்று ஸ்வவ்யதிரிக்தரைக் கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன்கிடீர் இப்போது ஓரப$_3$லைகட்டின கட்டை அவிழ்த்துக் கொள்ள ஶக்தனன்றிக்கேயிருக்கிறான். ''யதி$_3$ ஶக்நோஷி க$_3$ச்ச$_2$த்வமதி சஞ்சலசேஷ்டித'' (வி.பு.5–6–15) என்றாளிறே. ஸார்வபௌ$_4$ளமனை ராஜகுமாரன் தன்மஹிஷி கையிலே அகப்பட்டு ஒருமாலையாலே



visit us at www.srivaishnavan.com

'நீங்களும் ஸ்ரீவசநபூ4ஷணத்தி4காரிகளோ அஹங்காரம் மேலிட்டுச் சண்டையிடுவதற்கு' என்று தெருவில் சண்டையிடும் நாய்களைக் கேட்கும் வ்யாஜத்தால் விவாத3ம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் இருவரைத் தம்முள் விரோத4ப4ாவம் அற்றவர்களாகச்செய்தார் ஜீயர். *(13)*

दत्त्वा क्षेत्रं मठीयं भृतकभुजिमिषाद्रङ्गभर्त्रे निशीथे
वृद्धां कांचिद्विवास्य स्थविरतरुरुहन्यायतोऽलर्कहेतोः।
*पत्नीं वृद्धां च हित्वा पुनरपि कृपया वैष्णवागोविमुक्ताम्
अङ्गीकुर्वन्नसाह्यागतवरदहरिं स्वीचकारातिकृच्छ्रात् ।। १४

த3த்த்வா க்ஷேத்ரம் மடீ2யம் ப்4ருதகபு4ஜிமிஷாத்3ரங்க3ப4ர்த்ரே நிஶீதே2
வ்ருத்3த4ாம் காஞ்சித்3 விவாஸ்ய ஸ்த2விரதருருஹந்யாயதோऽலர்க்க ஹேதோஃ ।
*பத்நீம் வ்ருத்3த4ாம் ச ஹித்வா புநரபி க்ருபயா வைஷ்ணவா– கோ3விமுக்தாம்
அங்கீ3குர்வந்நஸாஹ்யாக3தவரத3ஹரிம் ஸ்வீசகாராதிக்ருச்ச்2ராத் ॥ *(14)*

(*இங்கு பத்நீம் என்றபத3ம் அநந்விதமாய் காணப்படுகிறது. ஶுத்3த4பாட2ம் இருப்பின் தெரிவிக்கவும்.)

ஒருஸமயம் மட2த்திற்குச் சொந்தமான விளைநிலத்துக் கூலியாட்கள் மட2த்திற்குச் சொந்தமானவிடத்தில் உண்டு சென்றதையறிந்து உடனே அந்நிலத்தை பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். ஒருநாள் வயதான மூதாட்டி ஒருத்தி, இரவு மட2த்திலே ஶயநிக்க(படுக்க) முற்பட, 'கிழட்டணிலாகிலும் மரமேறவல்லதொன்றன்றே, உகவாதார் அபவாதம் சொல்ல இது போதுமே' என்றுகூறி, அவ்வம்மையாரை வெளியேற்றினர்.

தளிகைக்காக கறியமுது திருத்தித்தரும் அம்மையார், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பரிவோடு ஸமர்ப்பித்த தூதுளங்கீரையை உதாஸீனப் படுத்தியதறிந்து, அவ்வம்மையாரை கைங்கர்யத்திலிருந்து விலக்கி, பின்னர் ப4ாக3வதாவமானம் பண்ணின பாபத்திற்கு மன்னிப்புக் கேட்கச் செய்து, க்ருபையுடன் ஏற்றுக் கொண்டார். ஜீயரை ஆஶ்ரயிக்கத் தனியே வந்த வரம்தரும்பெருமாள் பிள்ளையை (வரத3ஹரியை), 'ஸ்ரீவைஷ்ணவர்களை முன்னிடாது தனித்து வருவதே' என்று வெறுத்து, ஆறுமாஸம் புறத்திண்ணையிலே யிருக்கச்செய்து, பின்பு அங்கீ3கரித்தருளினர். *(14)*

सत्त्वस्थो दिव्यरूपं व्रतिवरमहितं प्राप्य सन्देशकर्ता
भट्टार्याय स्वशिष्यान् विनयभरितयन् दोषदृष्टिं विधूय ।
पूर्वानुष्ठाननिष्ठः पुनरपि वृषभाद्रीशमुख्यान् दिदृक्षुः
साकं श्रीवादिभीकृद्गुरुमुखविनतैरास्थयाऽसौ प्रतस्थे ।। १५



visit us at www.srivaishnavan.com

ஸத்த்வஸ்தே2ா தி3வ்யரூபம் வ்ரதிவரமஹிதம் ப்ராப்ய ஸந்தே3ஶகர்த்தா
ப4ட்டார்யாய ஸ்வஶிஷ்யாந் விநயப4ரிதயந் தே3ாஷத்3ருஷ்டிம் விதூ4ய।
பூர்வாநுஷ்ட2ாநநிஷ்ட2: புநரபி வ்ருஷப4ாத்3ரீஶமுக்2யாந் தி3த்3ருக்ஷு:
ஸாகம் ஸ்ரீவாதி3பீ4க்ருத்3கு3ருமுக2விநதைராஸ்த2யாऽஸௌ ப்ரதஸ்தே2॥ *(15)*

ஸத்த்வகு3ணத்தில் நிலைநிற்பவராய், வானமாமலைஜீயர் முதலான யதிகளால் ஆஶ்ரயிக்கப்பட்டவரான மாமுனிகள் நல்வார்த்தை கேட்டனுப்பிய வடநாட்டரசனொருவனுக்கு ப4ாக3வதஶேஷத்வமே பரமார்த்த2மென்று எழுதியனுப்பினர்.

அக்காலத்தில் கோயில் ப4ட்டரொருவர் ஜீயரிடம் 'உம்முடைய ஶிஷ்யர்கள் நம்மை வணங்காமல் அவமானப்படுத்துகிறார்கள்' என்று கூற, ஜீயரும் விசாரித்தவளவில் ஶிஷ்யர்கள் அவருடைய தே3ாஷங்களைச் சொல்லி 'எங்களுக்கு அவரை அநுவர்த்திக்க விருப்பமில்லை' என்ன, 'அவரைப் பெருமாளாக நினைத்துப் பணிவுடன் ஸேவித்துப் போங்கோள்' என்று தே3ாஷமுள்ளவிடத்திலும் கு3ணப்ரதிபத்தி நடக்கும்படி செய்தார்.

பூருவர்களின் அநுஷ்ட2ானத்தில் நிலைநிற்பவரான பெரியஜீயர் மீண்டும் திருவேங்கடம் முதலான தி3வ்யதே3ஶத்து எம்பெருமான்களைச் ஸேவிக்க ஆசைப்பட்டு ப்ரதிவாதி3ப4யங்கரம் அண்ணன் முதலான பணிவுள்ள முதலிகளுடன் புறப்பட்டார். *(15)*

नाथं स्तम्बेरमाद्रेस्तदनु सगरुतामीश्वरं सावतंसं
स्तुत्वा नत्वाऽथ तस्मिन् कतिपयदिवसान् देवराजादियुक्तः ।
नत्वा गृध्रह्रदेशं तदनु च घटिकाद्रीश्वरं देवराज-
ग्रामं श्रीरङ्गयित्वा विमलमथ सरस्सह्यजां स ह्यकार्षीत् ।। १६

நாத2ம் ஸ்தம்பே3ரமாத்3ரேஸ்தத3நுஸக3ருதாமீஶ்வராம்ஸாவதம்ஸம்
ஸ்துத்வா நத்வாऽத2 தஸ்மிந் கதிபயதி3வஸாந் தே3வராஜாதி3யுக்த:।
நத்வா க்3ருத்4ரஹ்ரதே3ஶம் தத3நு ச க4டிகாத்3ரீஶ்வரம் தே3வராஜ–
க்3ராமம் ஸ்ரீரங்க3யித்வா விமலமத2 ஸரஸ்ஸஹ்யஜாம் ஸ ஹ்யகார்ஷீத்॥ *(16)*

அத்திகி3ரிநாத2னை பேரருளாளனை ஸேவித்து, வைகாசித்திருநாளில் பக்ஷிராஜரான பெரியதிருவடிநாயனர் மீது ஆப4ரணம் போல் திகழும் அவனைப்பணிந்தேத்தி, அங்கேயே சிலநாட்கள் எழுந்தருளியிருந்தார். பின்பு திருநாள் ஸேவிக்க வந்த எறும்பியப்பாவோடு புறப்பட்டு திருப்புட்குழி எம்போரேற்றையும், கடிகைத்தடங்குன்றில் அக்காரக்கனி யையும் மங்க3ளாஶாஸநம் செய்தருளி, எறும்பியை அடைந்து,

visit us at www.srivaishnavan.com

அவ்வூருக்கு ‘வடதிருவரங்கம்’ என்று திருநாமமிட்டு, அங்குள்ள குளத்திற்கு ‘திருக்காவிரி’ என்று பெயரிட்டருளினார். *(16)*

दृष्ट्वा श्रीवेङ्कटाद्रिं तदनु स निकटे तस्य गोविन्दराजं
योगीन्द्रस्थापितं श्रीशठमथनमुखान् संयमीन्द्रांश्च नत्वा ।
आरुह्याद्रिं तदीशं यतिपतिसहितं श्रीनिधिं शङ्खचक्रो-
दञ्चद्बाहुं शठारिप्रमुखसुवचनैस्तुष्टुवे हृष्टचेताः ।। १७

த்3ருஷ்ட்வா ஸ்ரீவேங்கடாத்3ரிம் தத3நு ஸ நிகடே தஸ்ய கோ3விந்த3ராஜம்
யோகீ3ந்த்3ரஸ்தா2பிதம் ஸ்ரீஶட2மத2நமுகா2ந் ஸம்யமீந்த்3ராம்ஶ்ச நத்வா ।
ஆருஹ்யாத்3ரிம் ததீ3ஶம் யதிபதிஸஹிதம் ஸ்ரீநிதி4ம் ஶங்கசக்ரோ–
த3ஞ்சத்3பா3ஹும் ஶடா2ரிப்ரமுகா2ஸுவசநைஸ் துஷ்டுவே ஹ்ருஷ்டசேதாঃ ॥

பின்னர் திருவேங்கடமலையையடைந்து, அதன் அடிவாரத்தில் எம்பெருமானாராலே எழுந்தருளப்பண்ணப்பட்ட கோவிந்த3ராஜனையும், நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களையும் ஸேவித்து, திருமலை ஏறியருளி யதிராஜரான எம்பெருமானாரோடு, திருவாழி திருச்சங்குகளை திருக்கைகளிலேந்திய அலர்மேல்மங்கையுறைமார்பனை அருள்மாறன், சேரலர்கோன், நற்கலியன் முதலான ஆழ்வார்கள் (திருவேங்கட முடையான் விஷயமாக) அருளிச்செய்த பாசுரங்களை அநுஸந்தி4த்துத் திருவடிதொழுது மனம்மகிழ்ந்தார். *(17)*

तत्र श्रीकार्यक्लृप्त्यै यतिपतियमिनं कलपयित्वा निदेशेह्न
तस्मात्प्रस्थाय गत्वा रघुवरनिलयं किंगृहं निस्तुलेशम् ।
श्रीमन्तं भक्तिसारं दशरथतनयं पूर्णवर्यं च नत्वा
सूतं पार्थस्य नीरक्षितिधरतिलकं संयमीन्द्रं च भेजे ।। १८

தத்ர ஸ்ரீகார்யக்லுப்த்யை யதிபதியமிநம் கல்பயித்வா நிதே3ஶே
தஸ்மாத் ப்ரஸ்தா2ய க3த்வா ரகு4வரநிலயம் கிம்க்3ருஹம் நிஸ்துலேஶம் ।
ஸ்ரீமந்தம் ப4க்திஸாரம் த3ஶரத2தநயம் பூர்ணவர்யம் ச நத்வா
ஸூதம் பார்த்த2ஸ்ய நீரக்ஷிதித4ரதிலகம் ஸம்யமீந்த்3ரம் ச பே4ஜே ॥ *(18)*

அங்கே (திருமலையில்) ஸ்ரீகார்யத்திற்காக இளங்கேள்வி எம்பெருமானார் ஜீயரை நியமித்து, அங்கு நின்றும் புறப்பட்டு திருவெவ்வுளூர் வீரராக4வனையும், திருநின்றவூர் நித்திலத்தொத்தையும், திருமழிசையில் ப4க்திஸாரரான திருமழிசைப்பிரானையும், பச்சைவாரணப்



visit us at www.srivaishnavan.com

பெருமாள்கோயிலில் தா3ஶரதி2யான முதலியாண்டானையும், பூவிருந்த வல்லியில் காஞ்சீபூர்ணரான திருக்கச்சிநம்பியையும், திருவல்லிக் கேணியில் பார்த்த2ஸாரதி2யையும், திருநீர்மலை எம்பெருமானையும், ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாரையும் மங்க3ளாஶாஸநம் செய்தருளினர். *(18)*

भूयो नत्वा करीशं तदनु स मधुरां तद्द्वयोत्पत्तिभूमिं
गत्वा स्तुत्वाऽभिरामं फणितिलकपुरे देवनाथं च नत्वा ।
वन्दित्वा सत्कवीन्द्रं कलिमथनमुनिं दिव्यदेशान् प्रणम्य
श्रीरङ्गं प्राप्य योगी चिरविरहरुजं स्फीतमोदो मुमोच ।। १९

பூ4யோ நத்வா கரீஶம் தத3நு ஸ மது4ராம் தத்3த்3வயோத்பத்திபூ4மிம்
க3த்வா ஸ்துத்வாऽபி4ராமம் ப2ணிதிலகபுரே தே3வநாத2ம் ச நத்வா ।
வந்தி3த்வா ஸத்கவீந்த்3ரம் கலிமத2நமுநிம் தி3வ்யதே3ஶாந் ப்ரணம்ய
ஸ்ரீரங்க3ம் ப்ராப்ய யோகீ3 சிரவிரஹருஜம் ஸ்பீ2தமோதோ3 முமோச ।। *(19)*

மீண்டும் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி பேரருளாளனை ஸேவித்து, அங்கிருந்து த்3வயம்விளைந்த திருப்பதியான மது4ராந்தகத் திற்குச் சென்று சக்ரவர்த்தித்திருமகனைத் துதித்து, பின்னர் திருவஹீந்த்ர புரத்துக்கு எழுந்தருளி தெய்வநாயகனை மங்க3ளாஶாஸநம் செய்தருளி, நாலுகவிப்பெருமாளும் திருக்கலிகன்றியுமான திருமங்கையாழ்வாரை திருநக3ரியில் ஸேவித்து, திருக்கண்ணபுரம், ராஜமன்னார்குடி, திருக்குடந்தை முதலான திருப்பதிகளையும் வணங்கி, திருவரங்கத்தை அடைந்து, பெரியபெருமாளை நெடுநாள் பிரிந்ததாலுண்டான வருத்தம் தீர்ந்து மகிழ்ந்தார். *(19)*

नत्वा श्रीरङ्गनाथं विविधमणिमुखैर्वस्तुभिस्तोषयित्वा
नित्यं तत्रैव तिष्ठन् स्वदिनचरितकृद्देवराजार्यजुष्टः ।
सार्वज्ञाद्वृद्धकेशं वरदहरिमसौ पावनार्थं निदेष्टा
दृष्टादृष्टैर्वधूलं वरदगुरुवरं सन्ततं संपुपोष ।। २०

நத்வா ஸ்ரீரங்க3நாத2ம் விவித4மணிமுகை2ர் வஸ்துபி4ஸ் தோஷயித்வா
நித்யம் தத்ரைவ திஷ்ட2ந் ஸ்வதி3நசரிதக்ருத்3தே3வராஜார்யஜுஷ்ட: ।
ஸார்வஜ்ஞாத்3வ்ருத்3த4கேஶம் வரத3ஹரிமஸௌ பாவநார்த்த2ம் நிதே3ஷ்டா
த்3ருஷ்டாத்3ருஷ்டைர்வதூ4லம் வரத3கு3ருவரம் ஸந்ததம் ஸம்புபோஷ ।।*(20)*



visit us at www.srivaishnavan.com

# வேத3ங்களில் வராஹப்பெருமாள் வைப4வம்

**(எஸ்.க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்–ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவ ஸுத3ர்ஶநம்)**

த3ஶாவதாரங்களில் ஞானப்பிரானன வராஹமூர்த்தியின் வைப4வம் வாசாமகோ3சரமானது. பத்து அவதாரங்களில் ஞானத்தை அளிப்பவராகப் புகழ் பெற்றவர் வராஹப்பெருமாள் ஒருவரே. வேத3ங்கள் இவ்வவதாரத்தை அனுப4வித்தபடியை ஈண்டு சுருக்கமாகக் காண்போம்.

**1.க்ருஷ்ணயஜுர்வேத3த்தில் வராஹாவதாரம்**

ஆபோ வா இத3மக்3ரே ஸலிலமாஸீத் | தஸ்மிந் ப்ரஜாபதிர்வாயுர்பூ4த்வா அசரத் | ஸ இமாமபஶ்யத் | தாம் வராஹோ பூ4த்வா அஹரத் | இதன் பொருளைக் காண்போம்– ப்ரளயகாலத்தில் உலகெல்லாம் நீர்ப்பெருக்காயிருந்தது. அதில் 'பதிம் விஶ்வஸ்ய' எனப்படும் நாராயணன் வாயுரூபியாகி ஸஞ்சரித்தான். தன் தே3வியான பூ4தே3வி ப்ரளய ஜலத்தில் பாசிதூர்த்து நலிந்து கிடப்பதைக் கண்டான். நாயகி நோவுபடுவதைக்கண்டு நாயகன் உபேக்ஷையாயிருப்பானோ? பாசிதூர்த்துக் கிடந்த பார்மகளை ரக்ஷிப்பதற்காக மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியுருவை எடுத்துக்கொண்டு அந்த பூ4தே3வியை ப்ரளய ஜலத்திலிருந்து தூக்கியெடுத்து ரக்ஷித்தான் என்கிறது.

**2. ஶுக்லயஜுர்வேத3ம் ஶதபத2ப்3ராஹ்மணத்தில் வராஹாவதாரம்**

அத2 வராஹவிஹிதம் | ''இயத்யக்3ர ஆஸீத்'' இதி | இயதீ ஹ வா இயமக்3ரே ப்ருதி2வ்யாஸ ப்ராதே3ஶமாத்ரீ | தாம் ஏ மூஷ இதி வராஹ உஜ்ஜக4ாந | ஸோ஽ஸ்யா: பதி: ப்ரஜாபதி: | தேனைவைநமேதந்மிது2நேந ப்ரியேண த4ாம்நா ஸமர்த்3த4யதி | க்ருத்ஸ்நம் கரோதி || பிறகு ''இயத்யக்3ர ஆஸீத்'' என்னும் மந்த்ரத்தினுல்– வராஹத்தினுல் பறிக்கப்பட்ட மண்கட்டியை மான்தோலின் மேல் வைக்க வேண்டும். இந்த பூ4மி முதலில் இவ்வளவுபட்டதாகவன்றோ இருந்தது. (கடலில்) சிறிய ப்ரதே3ஶத்தை அடைப்பதாகவே இருந்தது. அந்த பூ4மியை வராஹரூபியான பரம்பொருள் ''அடிபூ4மி! எங்கே ஒளிகிறுய்?'' என்று கூறி உயரத்தூக்கினுர். அவரே ஜீவர்களுக்கெல்லாம் தந்தையாய் இவளுக்குப் புருஷனுயிருப்பவர். ஆகையால் மஹீவராஹரூபமிது2ந ஸம்ப3ந்த4முள்ள இக்கர்மத்தால் இந்த யாக3த்தில் ப்ரவர்க்3யத்தை இனிய தேஜஸ்ஸால் நிறைவிக்கிறுன். யாக3த்தையும் நிறைவுபடுத்துகிறுன்.

யாக3விஶேஷத்தில் வராஹத்தினுல் பறிக்கப்பட்ட மண்கட்டியை மான்தோலின் மேல் வைப்பதாகிற 'வராஹவிஹிதம்' என்னும் கர்மத்தை விதி4க்கும்போது அக்கர்மத்தைப் புகழ்வதற்காக வராஹவ்ருத்தாந்தத்தின் பெருமையைச் சொல்லுகிறது.

வல்மீகவபையைச் சேகரித்தபின்பு ''இயத்யக்3ர ஆஸீத்'' என்னும் மந்த்ரத்தைக் கொண்டு பன்றியால் பறிக்கப்பட்ட மண்கட்டியை எடுத்து மான்தோலின்மேல் வைப்பதாகிற வராஹவிஹிதகர்மத்தைச் செய்ய வேண்டும். ''இயத்யக்3ர ஆஸீத்'' என்னும் மந்த்ரத்தை வராஹத்தால் எடுக்கப்பட்ட மண்கட்டியை எடுக்கும்போது சொல்லுவதற்குள்ள பொருத்தத்தை விவரிக்கிறது மேலே. வராஹத்தின் த3ந்தத்தின் நுனியளவே இந்த பூ4மியானது ஆதி3காலத்தில் இருந்தது. ப்ரளயஜலத்தின் ஒரு சிறுப்ரதே3ஶத்தையே அடைத்துக் கொண்டிருந்தது. ''அடியே பூ4மி! எங்கு

ஒளிகிறுய்?'' என்று கூறிக்கொண்டே அவளே வராஹப$_4$க$_3$வான் த$_3$ந்தத்தால் குத்தியெடுத்தார். இப்படி பூ$_4$மியைக் கூப்பிடுவதற்கும், அவளே ப்ரளயாபத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் காரணமென்னென்னில், அந்த ப$_4$க$_3$வானன்றே பூ$_4$மிக்குக் கணவனுகவும் பூமியின் குழந்தைகளுக்குத் தந்தையாகவுமிருப்பவன். ''பிதா நாராயண:'' என்று ஓதப்படும் பூமி$_4$நாத$_2$னை நாராயணனே இப்படி வராஹமாய் வந்தவன் என்று காட்டுகிறது. இதிஹாஸபுராணங்கள் எல்லாவற்றிலும் இது ப்ரஸித்$_3$த$_4$ம். தந்தையன்றே தாயையும் குழந்தைகளேயும் ரக்ஷிக்கப்பாடுபடுவான் என்று கருத்து.

இத்தால் வராஹரூபியாய் அவதரித்து உலகை ரக்ஷித்த தெய்வமே பூ$_4$மிநாத$_2$னென்றும், உலகிற்குப் பதி என்றும் உணர்த்தப்பட்டதாயிற்று.

### 3. நாராயணவல்லியில் வராஹாவதாரம்

உத்$_3$த்$_4$ருதா஽ஸி வராஹேண க்ருஷ்ணேன ஶதப$_3$ாஹுநா|

(நூறு கையையுடைய க்ருஷ்ணனுகிற வராஹத்தால் தூக்கப்பட்டாயன்றே). இதற்கு முன்னுள்ள ''அஶ்வக்ராந்தே'' என்னும் மந்த்ரத்தில் ''விஷ்ணு க்ராந்தே'' என்று த்ரிவிக்ரமனுய் பூ$_4$மியைத் திருவடியால் தடவிக்கொடுத்ததை அநுஸந்தி$_4$த்து இம்மந்திரத்தில் வராஹமாய்த் தூக்கியணேத்தபடியைப் பேசுகிறது. (உத்$_3$த்$_4$ருதா஽ஸி வராஹேண) த்ரிவிக்ரமாவதாரத்தில் உன்னைத் திருவடிகளால் தடவிக்கொடுத்த அளவேயோ? வராஹாவதாரத்திலும் உனக்கு ஓர் ஆபத்து வந்தபோது உனக்குக் கைகொடுத்தவன் அவனேயன்றே! (வராஹேண) உனக்காக அவன் மாசுடம்பில் நீர்வாராமானமிலாப் பன்றியாயன்றே பிறந்தான். ''பன்றியாம்தேசு'' என்றும். ''கோலவராகமொன்ருய் நிலம் கோட்டிடைக்கொண்டவெந்தாய்'' என்றும் இவ்வவதாரமேயன்றே எம்பெருமானுக்குத் தேஜஸ்ஸைக் கொடுத்தது. (வராஹேண க்ருஷ்ணேன) ஆஶ்ரிதையான பூ$_4$மிதே$_3$வியின் கார்யத்தைச் செய்துமுடித்ததாக நினைத்திருக்கையன்றிக்கே தன்கார்யத்தைச் செய்துமுடித்தானுக நினைத்து ஆநந்தி$_3$த்தவனுல். (க்ருஷ்ணேன) ஆநந்த$_3$ஸ்வரூபியாயிருந்தவன்.

''க்ருஷிர் பூ$_4$வாசக: ஶப்$_3$த$_3$: ணஶ்ச நிர்வ்ருதிவாசக: | விஷ்ணுஸ் தத்$_3$ப$_4$ாவ யோக$_3$ாச்ச க்ருஷ்ண இத்யபி$_4$தீ$_4$யதே||'' 'க்ருஷி' என்பது பூ$_4$மியைச் சொல்வது, 'ண:' என்பது ஆநந்த$_3$த்தைக் குறிப்பது. விஷ்ணுவானவர் ஆநந்த$_3$பூ$_4$மியாயிருப்பதாலும், பூ$_4$மிக்கு ஆநந்த$_3$த்தை அளிப்பவராயிருந்தபடியாலும் 'க்ருஷ்ணன்' எனப்படுகிருர்.

''க்ருதக்ருத்யஸ் தத$_3$ா ராமோ விஜ்வர: ப்ரமுமோத$_3$ ஹ''

(லங்கையில் விபீ$_4$ஷணனுக்குப் பட்டாபி$_4$ஷேகம் செய்தபிறகு ஸ்ரீராமபிரான் தன்கார்யத்தைச் செய்துமுடித்தவராய், கலக்கமற்றவராய் ஆநந்தி$_3$த்தார்.) என்று வால்மீகிமஹர்ஷி வெளியிட்டருளினுர். (க்ருஷ்ணேன) எம்பெருமான், ஶ்வேதவராஹரூபியாகவே இருந்து பூ$_4$மியை ஜலத்திலிருந்து எடுத்தான் என்று சொல்லப்படுவதால், இங்கு ''கருநிறத்தையுடைய'' என்னும் பொருள் பொருந்தாது. ஆகவே முற்கூறியவாறே பொருள்கொள்ளவேண்டும். (ஶதப$_3$ாஹுநா) நூற்றுக்கணக்கான கைகளேயுடைய பெருமானுலே. பிராட்டியைப் பெற்ற ப்ரீதியின் மிகுதியாலே அவளே அணேத்துக்கொள்ளும் கைகள் ஒன்று பத்துநூருயிரமாகப் பெருகினபடி. ''தடம்பெரும் தோளாரத்தழுவும் பாரென்னும் மடந்தையை மால் செய்கின்றமால் ஆர்காண்பாரே''(திருவாய் 2–8–7) என்றுரன்றே வேதம்தமிழ் செய்தமாறன். ''ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபு$_4$ஜம்'' (ஸ்தோ.ரத்.44) என்று ஆளவந்தாரும் பிராட்டியை அணேக்கும்போது ப$_4$க$_3$வான் மஹாபு$_4$ஜனுவானென்று அருளினுரன்றே. 'ஶதப$_3$ாஹுநா' என்பதற்குப் பெரிய ப்ரயத்னத்தைச் செய்து என்றும் ப$_4$ாவமுரைப்பர்.